தென்மொழி

தமிழனாய் வாழ்வதே ஏற்றம் விளைக்கும்!

உள்ளே...

தமிழும் தமிழக அரசின் போக்கும்

தமிழிசையில்....

கலப்புத் தமிழ் மட்டும் விளங்குகிறதா ?

'திரு'

அரசுக்குப் பாதுகாப்பு மக்கள் சிக்கலா ?

ஆய கவலைகளுள் மூன்று

மக்களவை

செய்திகள்

மற்றும் பிற...

கெடும்புசெய் சிங்களத் தவரினும் தமிழர்
கொடும்பகை யாவது இந்திய அரசே!
ஆங்கவர் விடுதலை யளிக்கமுன் வரினு
தீங்கெனத் தலையிட்டுத் தடுக்கும் இந்தி
இந்திய அரசை எதிர்ப்பது தேசியக்
குந்தக மாமெனக் கூக்குர லிடினும்
மறமும் மானமும் உள்ள தமிழரை
அறமுறை யின்றி அடக்கி யொடுக்கி
இந்திய அரசோடு இணக்கங் கொள்ளி
எந்தமி ழர்க்கு நலமென ஏதும்
செய்ய இயலாது மெய்யுரை யீது
ஐயுற வுக்குச் சிறிதும் இடமிலை!
தமிழர் என்னும் உணர்வோடு ஈண்டு
நிமிர்ந்து வாழ இயலா நிலையில்
ஈழத் தமிழரை நம்மவர் என்று
வாழ வைத்தல் இயலுமோ தெளிக!
இங்குளோர் 'தமிழராய்' வாழ்வதே
எங்கெங் குளார்க்கும் ஏற்றம் விளைக்

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தமிழருக் குலகினில் புகழ் சேர்ப்பேன்!

எத்தனை இழிவுகள் பழிகளைக் கூறினும்
என்செயல் நடக்கும் விடமாட்டேன்! - ஒரு
சிந்தனைப் போலமுன் பின்உணர்ந் ததனால்
சிறுஅள வதிர்ச்சியும் படமாட்டேன்!
பித்தனைப் போலவும் பேடியர் போலவும்
பிதற்றுவார் தூற்றலுக் குளம் நடுங்கேன்! - ஒளி
முத்தனை தமிழில், இனத்தினில், நாட்டில்
முழுவுளம் பதித்தேன்! வினைஒடுங்கேன்!

தனியனாய் நடப்பினும் தனிவழி போகினும்
தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் நடைதளரேன் - மிகு
பனியினும் குளிரினும் வெயில்மழை சூழினும்
பதுங்கிட மாட்டேன்; மனம் உலரேன்!
இனியராய்ப் பேசி இழிஞராய் மாறும்
எத்தரை அணுகேன்; நிலைமாறேன்! - ஒரு
முனிவனாய் இருந்து முதுபொருள் உரைப்பேன்!
முதுதமிழ்க் குழைப்பேன்; பழி கூறேன்!

உழைப்பவர் உழைப்பினுக் குறுதுணை யாவேன்!
உலுத்தரை இடித்திடித் துரைதருவேன்! - பிழை
இழைப்பவர் எவரெனி னும்அவர் கடிவேன்!
ஏழையர்க் குதவுவார்க் கிணை வருவேன்!
அழைப்பவர் அன்பினுக் கறிவினுக் கடியேன்!
அதிகார ஆளுமைக் கடிபணியேன்! - நெறி
பிழைப்பவர் பிழையை நேருற உரைப்பேன்!
பேதையர் பிழைகளை உடன்மறப்பேன்!

- பாவலரேறு

(தெ.மொ : சுவடி : 20 ஓலை : 5-6)

T- 5850

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி 29) திபி. உ0உஅ - கும்பம் (பிப்ரவரி - '97) (ஓலை -2

தமிழும் தமிழக அரசின் போக்கும்!

தமிழ்அறிஞர்கள் உணர்வாளர்களின் உள்ளார்ந்த வரவேற்போடு ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த தி.மு. கழக அரசு தமிழுக்கெனத் தனித்துறை வகுத்துச் செயற்பட்டாலும் இன்று பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தமிழ் அறிஞர்களே அரசுக்கு எதிராக அறப்போரில் ஈடுபடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அழிம்புசெய்யும் ஆங்கிலவழிப் பள்ளிகள் எவ்வகைத் தங்குதடையுமின்றித் தம்போக்கில் செழித்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. மொழிப்பயிற்சி என்ற நிலையில் தமிழ் கட்டாயப் பாடமென்றால், பயிற்றுமொழி என்ற நிலையில் ஆங்கிலம் அதைவிடக் கட்டாயமாக நீடிக்கிறது. தமிழ்வழியில் பயின்றார்க்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அரசு அழுத்தமான அக்கறையுடன் செயல்பட வேண்டும் என்பது கோரிக்கையாகவே தொடர்ந்து கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் வழிபாட்டு மொழியாகவும் முழுமையான வாழ்வியல் மொழியாகவும் பல்துறைக் கல்வி அறிவியல் மொழியாகவும் ஆட்சி அறமன்ற மொழியாகவும் ஆகாத - ஆக்கப்படாத நிலையில் தமிழை இந்தியாவின் ஆட்சிமொழிகளுள் ஒன்றாக்குவோம் என்பது மொழித் தொடர்பான சிக்கலைத் திசைதிருப்புவதாகவே அமையும். தமிழ்மொழி இனஉணர்வோடு செயல்படுவோர் ஏதேதோ காரணங்காட்டப்பட்டு இனி அத்தகைய உணர்வே அவர்களுக்கு மட்டுமன்றி இனியாருக்குமே ஏற்பட்டுவிடக் கூடாது என்னும் நோக்கோடு கடுமையாக அடக்கியொடுக்கப்படும் நிலை நிலவுகிறது.

கலை கலைக்காகவே என்பது போல் ஆட்சி ஆட்சிக்காகவே என்றில்லாமல் ஆட்சி மக்களுக்காகவே; மக்களை உயர்த்தும் நற்பணிகளைச் செய்வதற்காகவே என்னும் நோக்கோடு தமிழக அரசு செயல்படுவது நல்லது.

இறை

நேரு சிலை-கொடைக்கானல் வெடிவழக்குகளில் தீர்ப்பு!

பொழிலன், முகிலன், இளங்கோ, அறிவழகன் ஆகியோருக்கு வாணாள் சிறைக் கொடுமை!

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த திரு. ம.கோ. இரா. 1987 இறுதியில் இறந்த பிறகு அ.தி.மு.க. ஆட்சியிலும் கட்சியிலும் குழப்பம் ஏற்பட்டது. பேராயக் கட்சியினர் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைப்பாகச் செயற்பட்டனர். ஆளுநர் ஆட்சி வந்தது. அப்போது இந்தியத் தலைமையமைச்சராகவிருந்த இராசீவ்காந்தி 13 நாள்களில் 10 தடவை தமிழ்நாட்டுக்குப் படையெடுத்துக் கொண்டிருந்தார். பெருந்தொகை செலவழித்து மறைமலைநகரில் பேராயக் கட்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பெற்றது.

இத்தகைய சூழலில், 1988 ஏப்பிரல் மாதம் சென்னை நேருசிலைக்கு அருகிலும் கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தின் சுற்றுச் சுவரிலும் 'தமிழ்நாடு விடுதலைப் படை' என்ற பெயரில் வெடிகுண்டுகள் வைத்ததாக, இந்திய வெடிபொருள்கள் சட்டம் (1908), இந்தியப் படைக்கலச்சட்டம், இந்தியத் தண்டனைச் சட்டம், பொதுச் சொத்துகள் அழிப்புத் தடுப்புச் சட்டம், (1984). ஆகிய சட்டங்களின்கீழ் திருவாளர்கள் பொழிலன், முகிலன் உள்ளிட்ட 19 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பெற்றது.

இவர்களுள் சுந்தரம் என்பவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவர் வழக்கிலிருந்து பிரிக்கப்பட்டார். வடிவேல் இராவணன் என்பவரும் சண்முகவடிவேலு என்பவரும் அரசுவகைச் சான்றாளர்களாக மாற்றப்பட்டனர். பொழிலன், முகிலன், இளங்கோ, திருவள்ளுவர் என்கிற அறிவழகன், தமிழ் ஈழத்தைச் சேர்ந்த பாலசந்திரன் ஆகியோர் தேசியப்பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஓராண்டு சிறையிலடைக்கப் பட்டனர். மற்றவர்கள் பிணையில் வெளியே வந்தனர்.

வழக்கு கேட்பு 1992 முதல் கொடைக்கானல் வழக்கு மன்றத்தில் நடந்து வந்தபோது குற்றச்சாட்டறிக்கை தரப்பட்டது. இவ்வறிக்கை ஆங்கிலத்தில் இருந்தது. அதைத் தமிழில் தருமாறு குற்றஞ்சாட்டப்பெற்றவர்கள் கோரினர். சில மாதங்களுக்குப் பின் 1993இல் அவ்வறிக்கை தமிழில் தரப்பெற்றது. பிறகு திண்டுக்கல் மாவட்ட அமர்வு வழக்கு மன்றத்தில் வழக்கு உசாவல் தொடங்கியது.

இவ்வழக்கு ஆண்டுக் கணக்கில் நடைபெற்று வந்தபோது நடுவர்கள் மாறிக்கொண்டிருந்தனர். புலனாய்வு அலுவலரும் ஓய்வுபெற்றார். இறுதியாக இவ்வழக்கின் தீர்ப்பினை 17.2.97இல் நடுவர் திரு. சர்தார் சக்கரியா உசேன் என்பார் வழங்கினார்.

தீர்ப்பில் திருவாளர்கள் புலவர் கலியபெருமாள், தென்மொழி இளமாறன், இளமுருகன், சுகுமாரன், இனியன், பவணந்தி, வீரமணி, பாலச்சந்திரன் ஆகிய எண்மர் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப் பெற்றனர். திருவாளர்கள் ஈகவரசன், குணத்தொகையன், தெய்வம்மணி, ஆகியோர் ஒவ்வொருவரும் உரு. 500/- தண்டத் தொகை செலுத்தவேண்டும் என்பதோடு அவர்கள் ஒவ்வொருவர்க்கும் மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனையும் தி. குண்டலகேசி என்பார்க்கு உரு. 500/- தண்டத்தொகைச் செலுத்தவேண்டும் என்பதோடு அவர்க்கு ஓராண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும் அளிக்கப்பெற்றன. இவர்கள் மேல்முறையீடு செய்து கொள்ள தண்டனை நிறுத்தி வைக்கப்பெற்றுப் பிணையலில் விடுவிக்கப் பெற்றனர்.

'திருவாளர்கள் பொழிலன், முகிலன், இளங்கோ, திருவள்ளுவர் என்கிற அறிவழகன்' ஆகியோர் வெடிவைத்ததனால் நேரு சிலையருகில் சில கற்கள் பெயர்ந்தன; சில விளக்குகள் உடைந்தன; கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையச் சுற்றுச் சுவரில் ஓட்டை விழுந்தது; சாளரக் கண்ணாடிகள் உடைந்தன; இவ்விழப்புகளின் மதிப்பீடு முறையே உரு. 3806/- மற்றும் உரு. 2745/- என்பதான அரசின் குற்றச்சாட்டுகளுக்கு இவர்கள் ஒவ்வொருவர்க்கும் **வாழ்நாள் சிறையளிக்கப் படுவதாக** நடுவர் தீர்ப்பளித்தார்.

'முந்திரா, நகர்வாலா, போபர்சு முதலிய ஊழல்களிலும் பிற பிற ஊழல்களிலும் மக்கள் பணத்தைக் கோடி கோடியாகக் கொள்ளையடித்தவர்கள் பட்டம், பதவி, வளவாழ்வு பெறுகையில்' சட்டத்திற்குட்பட்ட வகையில் மக்களுக்காகப் போராடி வரும் இளைஞர்களுக்கு அவர்கள் மேற்படி நடவடிக்கையைச் செய்திருந்ததாகவே வைத்துக் கொண்டாலும் இந்தச் சிறு இழப்புகளுக்காக இவ்வளவு மிகப்பெருந்தண்டனையா? என்றெல்லாம் தீர்ப்பை அறிந்த மக்கள் இரங்கிப் பேசிக்கொண்டனர்.

வாழ்நாள் சிறைத் தண்டனை அளிக்கப் பெற்ற மேற்படி நான்கு இளைஞர்களும் வழக்கு மன்றத்திலிருந்து திருச்சி நடுவண் சிறைக்கழைத்துச் செல்லப்படும்போது முழக்கங்களை உரத்து முழங்கினர். சுற்றிலும் நின்ற நம் அன்பர்களும் பொதுமக்களும் மிகுந்த எழுச்சியுடன் அவர்களுடன் சேர்ந்து முழங்கிக்கொண்டிருந்தனர்.

அரசுக்குப் பாதுகாப்பு மக்கள் சிக்கலா?

மாந்த இனம் தன் பாதுகாப்பின் பொருட்டே கூடி வாழக்கூடிய குமுகாய அமைப்பை உருவாக்கிக் கொண்டது. எந்த இயற்கை அல்லது செயற்கைப் பிரிவின்கீழும் கூடி வாழும் இயல்பை மாந்தன் பெற்றுக்கொண்டான்.

ஆண்பெண், இனம், நிலம் போன்றவை இயற்கைப்பிரிவுகள். சாதி, மதம், நாடு, அரசு போன்றவை செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பிரிவுகள் இளவயனைத்தும் இயற்கை யழிவுகளை எதிர்க்கவும் பிற தாக்கங்களினின்று தங்களைக் காத்துக்கொள்ளவும் பயன்பட்டன. ஒரு பிரிவு மக்கள் மற்றப் பிரிவு மக்களால் தாக்குதலுக்கு உட்படாது காத்துக்கொள்ளவும் இந்தக் கட்டுக்கோப்புப் பயன்பட்டது.

இப்போதோ அப் பாதுகாப்பு அமைப்புகளாலேயே மாந்தஇனம் அழிவுபடத் தொடங்கியுள்ளது மிகவும் இழிவானது; பகுத்தறிவுக்கு ஒவ்வாதது; இயற்கைக்கு முரணானது. சாதி அமைப்புகள், மதங்களின் அமைப்புகள் பெருமளவில் வல்லாளுமைக் கருவிகளாகப் போய்விட்டன. இவற்றை அழிப்பதற்குத் தெரியாமல் விழிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இவற்றினும் மோசமானது இனத்தாக்க நிலை. இன்றைக்கு வெளிப்படையான ஒரு செய்தி தமிழன் என்ற இனத்திற்கு உலகில் எங்குமே பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது என்பதுதான். அவன் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் இந்தியன் ஆவான். தமிழில் அவன் பயிலமுடியாது. பயின்றாலும் இந்தியாவில் அரசுப் பணி கிடையாது. அவனின் தாய்மொழி வீட்டு மொழியாகக்கூட இல்லாமல் வேலைக்காரர்களிடம் பேசும் ஏவல் மொழியாகிவிட்டது. ஆங்கில வெறியர்களை அவைத் தலைவர்களாக்கி, தமிழ்மொழியை முழுமையான பயிற்று மொழியாக்கவியலாத நிலையில் தமிழுக்குத் தனி அமைச்சகம்.

ஈழத்தமிழரின் கொடுமையைப் பற்றிப் பேச்செடுக்கும் போதெல்லாம் இராசீவ் கொலையினைக் காரணங்காட்டிப் பல்லாண்டுகளாகத் தட்டிக்கழிக்கும் இழிவுநிலை. இந்திராகாந்தியைச் சுட்டதனால் பஞ்சாபின் உரிமை பேசப்படாமலா போய்விட்டது? ஆனால் இராசீவ் கொலைக்காகமட்டும் தமிழீழ உரிமையைப் பேசத் தமிழ்நாட்டு அரசு தயங்கும் நிலை!

சிறீலங்காவிற்குள் தமிழனாகப் பிறந்திருப்பின் ஒரேயொரு சிறுபான்மையின்க் குடிமகனாக இருந்திருப்பான். தனிக்குடிமகனாக

இருந்தால் சிங்களப்படைக்கு அஞ்சி இடத்திற்கு இடம் குடிபெயர்ந்து ஓடி ஓடி வாழவேண்டியவன் ஆகிறான். துமுக்கி முனையிலும் குண்டு வீச்சிலும் தப்பினால் வாழ்வு. அமைதிப்படை போன்ற அயல்நாட்டுப் படைவீரர்களால் திருட்டு, கற்பழிப்பு, பதற்றவாழ்க்கை இவற்றை விட்டுப் படகிலே தவறி வந்துவிட்டால் தமிழகத்தில் சட்டிக்குத் தப்பி அடுப்பில் விழுந்தது போன்ற (முகாம்) சிறைவாழ்வு. அதிலும் அரசியல்-அதிகாரிப் பெருச்சாளிகள்!

இவற்றை எதிர்த்து இயக்கப்படுத்திக்கொண்டு இயங்கினால் இலங்கை மட்டுமல்லாமல் இந்தியாவிலும் தடை. தமிழக அமைச்சர்களும் இதற்குப் பரிந்துரை.

இலங்கையிலேயே நாட்டை விட்டு காட்டில் வந்தால் ஊண், உடை, உறையுள் இன்றி நோய்க்கு மருந்தின்றிச் செத்துக் கொண்டிருக்கும் இழிநிலை. ஏதிலிப் பிணத்தைக்காட்டிக் காசு தண்டுவதைப்போல் இம் மக்களைக் காட்டி தமிழகத்தில் அரசியல் நடத்தும் இழிநிலை அமைப்புகள். உலகப்பொது இயக்கத் தலைவர்களையெல்லாம் கொச்சையாகப் பொய்க்குற்றம் சாற்றி சிறையிலிட்டு தமிழினப்பாதுகாப்புப் பேசும் தமிழக அரசு! மக்களுக்குப் பாதுகாப்பு அரசு என்றால் அரசுக்குப் பாதுகாப்பு மக்கள் சிக்கலா?

- குன்றன்

இசைமொழி - வேலுமணி திருமணம்!

தி.பி. 2028 கும்பம் 13 திங்கட்கிழமை (24.2.97) அன்று, பாவலரேறு ஐயா அவர்களின் பேர்த்தியும் புலவர் இறைக்குருவனார். பொற்கொடி மகளுமான செல்வி இசைமொழிக்கும் சென்னை மயிலாப்பூர் க. பஞ்சாட்சரம் - மோகனா மகன் செல்வன் வேலுமணிக்கும் சென்னை - வேளச்சேரி இராசா திருமண மண்டபத்தில் திருக்குறட் செம்மல் முனைவர் கா.பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் திருமணவிழா சிறப்புற நடைபெற்றது. திருவாட்டி தேன்மொழியருளின் மங்கலவாழ்த்துப் பாடலைத் தொடர்ந்து திரு கி. குணத்தொகையன் வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வு அறிஞர் அருளியார் அறிமுகவுரை நிகழ்த்தினார். முனைவர் கா.பொ. இரத்தினம் அவர்கள் தலைமையுரையாற்றி மண நிகழ்ச்சியை நடத்திவைத்து வாழ்த்தினார்.

'தமிழம்' செ. பன்னீர்ச் செல்வம், மருத்துவர் தெய்வநாயகம் நடிகர் தமிழாகரன் (மன்சூர்அலிகான்) மருத்துவர் மல்லிகேசன், முனைவர் இரா. இளவரசு, திருக்குறள் பெருமாள், உ.த.மு.க. பொதுச் செயலாளர் மா.செ. தமிழ்மணி, பாவலர் முல்லைவாணன், 'வண்ணச்சிறகு' வலவன், பேராசிரியர் இலெனின் தங்கப்பா, பாவலர் காசி ஆனந்தன், அம்மை தாமரை பெருஞ்சித்திரனார், தமிழரசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். இசைவாணர் சிவானந்தம் வாழ்த்துப்பா இசைத்தார். ஏராளமான தமிழறிஞர்களும் அன்பர்களும் மணநிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தூத்துக்குடி திரு இரெ. சந்திரசேகரன் நன்றி நவின்றார். மணமக்களைத் தென்மொழி வாழ்த்துகிறது.

எங்கிருப்பான் இந்நேரம்?

— பாவலர் இளஞ்சித்திரன் —

வந்திடுவேன் என்றுசொன்னான்!
வாய்நிறையப் பேசிச் சென்றான்!
இன்றுவரை வரவில்லையே! தோழி,
எங்கிருப்பான் இந்நேரம்? வாழி!
(வந்திடு)

செந்தமிழர் திருநாட்டில்
வந்துவிட்ட இந்தியினை
எந்தவிலை கொடுத்தேனும்
வந்தவழி போகச்செய்ய வேண்டும்! - அந்தச்
சிந்தையுள்ள நம்தமிழர்
செய்தவொரு மறியலிலே
முந்திநின்று தலைநகரின்
முழங்கியவன் சிறைசென் றிருக்கவேண்டும்!
(வந்திடு)

இங்குத்தமிழ் வழிக்கல்வி
இல்லை; அதைக் கொண்டுவரப்
பொங்கிஎழ வேண்டும்நாம்!
ஆங்கிலத்தை அகற்றிடவே வேண்டும்;- என்று
முங்குணர்வர் போராட
முடிவெடுத்தார்! அவர்களுடன்
தங்கியங்குப் பணிகளினைத்
தான்நடத்தத் தலைகொடுத் திருக்கவேண்டும்!
(வந்திடு)

அன்னைநிலம் நம்நிலத்தை
அயலவர்கைப் பற்றிநிற்பார்!
இன்னநிலை இழிவகல
எழுந்தவரை விரட்டிடவே வேண்டும்;- என்று
சொன்னவனாம்! சொன்னபடி
தொடுக்கும்போர்க் கிளைஞர்களை
நன்றழைக்கும் கடமையினை
நடத்திவிடத் துணிந்துவிட் டிருக்கவேண்டும்!
(வந்திடு)

திரு

– கு. குழந்தைவேலன்

அரசனின் ஆட்சிக் கோயிலிலும், இறைவனின் காட்சிக் கோயிலிலும் பேரிடம் பெற்ற வேதியர்களுக்குத் தமிழ்நாட்டு இறைப் பெயர்களும், கோயிற் பெயர்களும் தமிழில் இருப்பது மன உறுத்தலாக இருந்தது போலும். அதனால் நாயன்மாராலும் ஆழ்வார்களாலும் செந்தமிழால் அழைக்கப்பட்ட பெயர்களை வடமொழியில் மொழிபெயர்த்து அதனை மெய்ப்பிக்கப் புனைகதைகள் பல புனைந்து மக்களிடையே பரப்பினர். ஒவ்வோர் இடத்திற்கும் தம் மொழிபெயர்ப் பிற்கேற்பத் தொல்கதைகளையும் பெருமைகள் (மகாத்மியங்கள்) பலவற்றையும் எழுதி வைத்தனர். இதனைப் பகுத்தறியாப் பிற்காலப் புலமைச் செல்வர் பலர், பத்தி என்ற பெயரால் அப்புனைகதைகளை மெய்மை எனக் கொண்டு தம் செந்தமிழ்ப் புலமைத் திறத்தால் கோயில் தொன்மங்கள் (தல புராணங்கள்) பல பாடி அதனை உறுப்படுத்தினர் என்றால் பொதுமக்கள் நிலைமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? ... மெய்போலும் மெய்போலும்! என்னுங் கூற்றுக்கு இதுவே சிறந்த சான்று.

[தமிழகத்தில் பத்தி இயக்கத்திற்கு வித்திட்டு வளர்த்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் நற்றமிழ்க் கோட்பாட்டினரே யாயினும் காலச் சூழலால் வேதமதத்தையும் ஏற்றுப் போற்றினர். இவர்கள் முழுமையான வேதமதத்தவரும் அல்லர், முழுத் தமிழ்க் கோட்பாட்டினரும் அல்லர். இரண்டுங் கலந்த ஒரு புதுக் கோட்பாட்டினர். வேதமதக் கருத்துகளை ஏற்றுப் போற்றினரேயாயினும் வடமொழியை அந்த அளவுக்கு ஏற்கவில்லை. வேதமதத் தாக்கத்தாலும் செய்யுள் ஓட்டத்தாலும் வடசொற்கள் சிலவற்றை ஏற்றாலும் வடவெழுத்துகளைச் சிறிதும் ஏற்கவில்லை. தென்றமிழைச் சிதையாமல் காத்த செயலில் இவர்களுக்குப் பெரும்பங்குண்டு. இவர்கள் தமிழ்க்காவலர்கள். இவர்களின் செயல் பின்வந்த கொங்குவேளிர், திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார், வில்லிபுத்தூரார் முதலான இலக்கிய ஆசிரியர்களுக்கும் வழிகாட்டியாக நின்று வடமொழிக் கலப்பைக் குறைத்தும் வடவெழுத்தை ஒதுக்கியும் தமிழ்க்காப்பு செய்தது. இவர்களும் தமிழைச் சிதையாது காத்த செம்மல்களே.]

தமிழ்நாடு எங்கணும் உள்ள கோயில்கள் அனைத்தும் கடவுள் தன்மையும் அழகும் செல்வமும் மேன்மையும் உடைய இறைவன் உறை விடங்களாகக் கருதப்பட்டமையால் ஆழ்வார்களும் நாயன்மார்களும் 'திரு' என்னும் அடைகொடுத்தே பாடினர். பாடலின் ஓசையும் சொற்சேர்க்கையும் இயையாத பொழுது மட்டுமே திரு என்ற

அடையின்றியும் பாடியுள்ளனர். இதன் அடிப்படையில் அவர்கள் பாடிய இடங்களில் அரசர்களும் செல்வர்களும் பெருங்கோயில்களைக் கட்டினர்; கோயிற் கட்டுமானம், கோயிற்பணிகளுக்கான கொடை போன்றவற்றைக் கல்லில் வெட்டுவித்தனர். அக் கல்வெட்டுகளில் அக் கோயிலையும் கோயிலில் உறையும் இறைவனையும் திரு என்றும், உடையார் திரு என்றும் முன்னடை கொடுத்ததோடு உடையார், நாயனார் என்று பின்னடை கொடுத்தும் பொறித்து வைத்தனர். ஆனால் வேதியர்கள் அத் திருவை "ஸ்ரீ" ஆக்கியும், தமிழ்ப் பெயரை வடமொழிப்படுத்தியும், ஏலாத இடங்களில் புதுவடமொழிப் பெயரைக் கொடுத்தும் அப்பெயரால் போற்றி சொல்லியும் மக்கள் மனத்தில் பதியவைத்தனர்.

எடுத்துக்காட்டாக, ஆடுதுறை என இன்று வழங்கும் தென்குரங்காடு துறை நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில். இவ்வூர் இறைவனைத் தம் இன்னிசைத் தமிழ்ப் பாடல்களில் அழைத்துப் போற்றியுள்ளனர். செங்கற்றளியான இக்கோயில் செம்பியன் மாதேவியார் (கண்டராதித்தன் மனைவி, 9, ஆம் நூ.ஆ) கற்றளியாகக் கட்டப்பட்டது. இவ்வம்மையார் கற்கோயிலாகக் கட்டுமுன் தனிக்கல்லில் வெட்டிவைக்கபட்டிருந்த பாண்டிய அரசர்களின் 8-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டிலும் பின்வந்த சோழ அரசர்களின் கல்வெட்டிலும் இவ்வூர் திருக்குரங்காடுதுறை என்றும், இறைவன் உடையார் திருக்குரங்காடுதுறை உடையார் என்றுமே பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று அந்த வழக்கொழித்து ஆ ஸ்ரீ ஆபத்சகா யேசுவரர், என்றே அறியவும் அழைக்கவும் படும் நிலை உள்ளது.

குடமூக்கிற்கு (கும்பக்கோணம்) அருகில் உள்ள திருச்சேறை என்ற ஊரில் நாயன்மார்களாலும், ஆழ்வார்காலும் பாடல் பெற்ற சிவனிய, மாலியக் கோயில்கள் இரண்டு உள்ளன. சிவன் கோயிலைப் பாடிய அப்பரும், திருஞானசம்பந்தரும் ஊரைச் சேறை என்றும் இறைவனைத் திருச்செந்நெறியுடையார் என்றும் போற்றியுள்ளனர். கல்வெட்டுக்களிலும் இறைவன் திருச்செந்நெறி உடையார் என்றே பொறிக்கப்பட்டுள்ளார். அதே போல் திருமங்கையாழ்வார் இங்குள்ள திருமாலைத் தண்சேறை எம்பெருமான் என்றும், ஊரைத் திருச்சேறை என்றும் திருவாய் மொழிந்தருளியுள்ளார். கல்வெட்டுக்கள் இக்கோயிலை திருநாராயண விண்ணகராழ்வார் என்று தமிழிலேயே திரு என அடைகொடுத்தும் வழங்குகின்றது. ஆனால் இவற்றிற்கு மாறாகச் சிவன் கோயில் 'ஸ்ரீ சாரபரமேஸ் வரர்' என்றும் திருச்சேறை எம்பெருமான் 'ஸ்ரீ சாரநாதப் பெருமாள்' என்றும் வடமொழிப் பெயர்களை நிலைப்படுத்திவிட்டனர். இதன் வழக்குத் தாக்கத்தால் பின் வந்த கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "ஸ்ரீ சாரநாதசாமி" என்று பதியப்படும் நிலைமை ஏற்பட்டது.

இதே போன்று, நன்னிலம் வட்டத்துத் திருப்பனையூர், சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்றகோயில். இப்பாடல்களில் இவ்வூரைத் திருப்பனையூர் என்றும் இறைவனை அழகியார் என்றும் வாயாரப் புகழ்கின்றார். அதற்கியையவே இக்கோயிலில் உள்ள சோழ, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் அனைத்தும் "திருப்பனையூர்

உடையார் அழகிய நாயனார்" என்றும், "அழகிய தேவர்" என்றுமே கூறுகின்றன. இந்த அழகியார் என்ற அழகிய தமிழ்ப் பெயரை வடமொழியில் 'சௌரந்தர ஈசர்' என மொழி பெயர்த்து 'ஸ்ரீ' என அடைகொடுத்து "ஸ்ரீ சௌந்தரேசுவரர்" என்று கதை கட்டிவிட்டனர்.

இது போன்றே உடையார் திரு மயிலாடுதுறை உடையார் (மயிலாடுதுறை நாகை மாவட்டம்) "ஸ்ரீ மயூரநாதர் ஆக்கப்பட்டார், மயிலாடுதுறை மயூரம் - மாயவரம் ஆக்கபட்டது. திருமறைக்காடர் ஸ்ரீ வேதாரண்யேசுவரர் ஆக்கப்பட்டார், திருமறைக்காடு வேதாரண்யம் ஆனது, திருவெண்காடார், ஸ்ரீ சுவேதாரண்யர் (திருவெண்காடு) ஆனார். திரு ஆண்டளந்த நாயனார், 'ஸ்ரீ வர்த்தமானேசுரர்' ஆனார். திருமுப்பனை ஈசுவரமுடையார் ஸ்ரீ த்ரைதாளீசர் ஆனார்; உடையார் திருச்செஞ்சடையப்பர் (திருப்பனந்தாள்) ஸ்ரீ அருணசடேசர் ஆனார்; திரு ஐயாரப்பன் (திருவையாறு) ஸ்ரீ பஞ்சநதீசுவரர் ஆனார்; காஞ்சிபுரத்துத் திரு ஆருளாளப் பெருமாள், ஸ்ரீ வரதரானார். ஆனால் இவை போன்றே தமிழ் நாட்டுச் சிவனிய, மாலியக் கோயில்கள் மட்டுமன்றி மற்றைய தமிழர் வணங்கும் சிறு கோயில்களும் பைய்ப் பைய வடமொழியாக்கப்பட்டதற்கு நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

தமிழ்நாடெங்கனும் உள்ள கோயில்கள் அனைத்தும் முழுத் திருவுடைக் கோயில்களாகவும், தமிழுடைய கோயில்களாகவும் இருந்ததனை ஆழ்வார், நாயன்மார்களின் திருப்பாடல்களும் பழங் கல்வெட்டுகளும் எடுத்துரைக்கின்றமையைக் கண்டோம். அவை வலிந்து வடமொழியாக்கப்பட்டன என்பதையும் கண்டோம். இவ் வடமொழியாக்கம் தொடக்கத்தில் எடுபடவில்லையாயினும் எறும்பூரக் கல்லும் தேயும் என்பதற்கிணங்கத் திணிப்பாரின் திண்மையால் மக்கள் வழக்கில் மட்டுமின்றிக் காலப்போக்கில் பின்வந்த கல்வெட்டுகளிலும் இடம்பெறத் தொடங்கின. எனினும் மக்கள் வழக்கில் பெற்ற இடத்தைக் கல்வெட்டில் பெறவில்லை.

ஆழ்வார், நாயன்மார் பாடல் பெற்ற கோயில்கள் ஏற்பகளவே தமிழ் பாக்களால் மக்களிடையே வழக்குப் பெற்றமையால் ஸ்ரீயும், வடமொழிப் பெயரும் அக்கோயில்களில் உள்ள தொடக்கக் காலக் கல்வெட்டில் இடம் பெறவில்லை. காலப் போக்கில் மாற்றம் பெற்றாலும் அம் மாற்றம் மிகக் குறைவாகவே கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ஆழ்வார், நாயன்மார் காலத்திற்குப் பின் பல்லவ பாண்டிய சோழ, விசயநகர அரசர்கள் தம் வெற்றி, குலப்பெருமை பத்தி ஆகியவற்றின் அடிப்படையில் பல பெருங்கோயில்களைக் கட்டினர். அக்கோயில்கள் பெரும்பாலும் கட்டிய அரசர் அல்லது அரசரால் மதிக்கப்படும் முன்னோன் பெயராலேயே பெயர் பெற்றன. கழகக் காலத்திற்குப் பின் தமிழகத்தை ஆண்ட எந்த மன்னரும் தமிழ்ப்பெயரைத் தம்பெயராகக் கொள்ளும் வழக்கம் இன்மையால், அவர் பெயரால் ஏற்பட்ட கோயில்களும் வடமொழிப்பெயரைப் பெற்றதில் வியப்பில்லை.

அவ்வட மொழிப் பெயர்களோடு "ஸ்ரீ" என்ற அடைமொழியைச் சேர்த்து ஸ்ரீ ராஜராஜேச்சுரம் (தஞ்சை) ஸ்ரீ திரிபுவன வீரேச்சுரம் (திரிபுவனம்) என்பன போன்ற பெயர்களைப் பெற்றன. இவை வடமொழியாளர்கள் வித்திய விதையின் விளைவு.

நாயன்மார், ஆழ்வார் காலங்களுக்கு பின்னர்த் தோன்றிய பல கோயில்கள் வடமொழிப் பெயர்களே சூட்டப்பட்டாலும் கூட 'திரு' என்ற அடைமொழியைக் கைவிடவில்லை. அந்த அளவுக்கு அச்சொல் வலிவுடைய ஏற்றமான சொல்லாகவே இருந்துள்ளது. திரு வகத்தி சுரம் (மாடம்பாக்கம், சைதைவட்டம்) திரு அர்ச்சுனீசுரம் (பொழிச்சலூர், சைதை வட்டம்) திருநாகீசுரம் (குன்றத்தூர், பெரும் பூதூர் வட்டம்; கும்பகோணம் வட்டம்) திருவாகீசுரம் (கீரனூர், மேலூர் வட்டம்) போன்ற பல கோயில்கள் வடமொழிப் பெயரே பெற்றாலும் திருவை விடவில்லை. ஏன் இராசராசனது தஞ்சைப் பெரிய கோயில் "ஸ்ரீ இராஜராஜேச்சுரம்" எனப் பெயர் பெற்றாலும் அப்பெயருக்கு முன் "நாம் எடுப்பித்த இத்திருக்கற்றளி" எனத் திரு கொடுத்தல் திருவின் அழிக்க இயலாப் பேரிடத்தையே காட்டுகின்றது.

வடமொழி பெற்ற சாய்கால் அரசர்களும், செல்வர்களும் அவர்களுக்களித்த இடம், கல்வி கேள்விகளில் அவர்கள் பெற்ற வாய்ப்பு, தமிழகக் கோயிற்காணி, நிலக்காணி உடைமை, குமுகாயத்தில் தம்மை உயர்ந்த சாதியினர் என்று கட்டிப் படைத்துக்கொண்ட சாதியத் தகுதி, அவர்கள் இட்டுக் கட்டிய கதைகள் ஆகியவற்றால் ஆண்டைகளாகத் தோன்றிய அவர்கள் சொல் அம்பலம் ஏறியது. பல்வேறு அரசியல், சமயத் தாக்கங்களால் மொழி, இனவுணர்வு அமுக்கப்பட்ட தமிழ்க்குடிகள் பத்தி என்ற பெயரால் பகுத்தறியாது அவர்கள் சொல்லையே மறைமொழி எனக் கொண்டொழுகினர். தமிழகக் குடிகளில் மேட்டுக்குடிகளாக — வடமொழியாளர்க் கிணையாகத் தங்களைக் காட்டிக்கொள்ளக் கல்வி கேள்வி உடைய வாராகி அதே நேரத்தில் வேதமத நெறியையும் வடமொழியையும் போற்றிக் காட்டிக்கொண்ட, உயர் சாதியம் கற்பித்துக் கொண்டவர்களும் அவ் வேதியர்கள் போலொழுகி, ஏற்றுக்கொள்ளல் சரியே என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தனர். அதோடு, வளம்பட்ட வேதவாணர்கள் கட்டிவிட்ட அச்சமொழிகள், அவர்களைக் கட்டிப்போட்டன. அவர் சொல்லுக்கு, அல்லது அவர்களுக்குத் தவறாக நடப்பவர் கரிசு (பாவம்) அடைவர் என்ற நம்பிக்கை வேரூன்றியது. எடுத்துக்காட்டாக,

"பிராமணர்களுக்குத் தானஞ்செய்ததைக் காப்பதைக் காட்டிலும் புண்ணியத்திற்குக் காரணமானது வேறெதுவும் இப்பூமியில் இல்லை. அதை அபகரிப்பதைக் காட்டிலும் பாவத்திற்குக் காரணமானது வேறெதுவும் இல்லை"

என்றும்,

"விடமென்று (நஞ்சு) சொல்லப்படுவது விடமல்ல; பிராமணன் சொத்துதான் விடம். விடம் (நஞ்சு) ஒருவனை மட்டும்தான்

"கொல்லும். பிராமணன் சொத்து கைப்பற்று பவனுடைய (அபகரிப்பவர்) மக்கள் பெயரர்களையும் (புத்திர பவுத்ர) அழிக்கும்"

என்றும் (சிவரமங்கலச் செப்பேடு)

"தான் அளித்ததும், பிறர் அளித்ததுமான கொடை நிலத்ததை (தானபூமி) எவன் கைப்பற்றுகிறானோ (அபகரிக்கிறானோ) அவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் மலப்புழுவாய்ப் பிறப்பான்"

என்றும் (சின்னமனூர் செப்பேடு)

"இதற்கு (கொடைக்கு) அழிவு செய்வான் (அகிதம்), தாய், தந்தையரைக் (மாதா பிதா) கொன்ற கரிசிலும் (பாசத்திலும்) காராவை (காராப் பசுவை) கங்கைக் கரையிலே கொன்ற கரிசிலும் (பாவம்) போகக் கடவர்"

என்றும் இன்னோரன்ன பல சாவ மொழிகளை எழுதியும், எடுத்துக் கூறியும் அச்சத்திலே அடக்கி வைத்திருந்தனர். இதனால் எல்லாம் வடமொழி மறைவர்க்கு ஆட்பட்ட தமிழர்கள் தம்மை அறியாமலே இத்தகைய ஏட்டிலும் எழுத்திலும் இல்லா மொழி மாற்றங்களை ஏற்றனர். இவ்வழியே 'ஸ்ரீ'யும் நம்மிடையே இடம் பெற்றது.

இதுகாறும் சுருங்கக் கண்டவற்றால், தமிழகத்து ஊர்களும், கோயில்களும் இறைவன் பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே முன்பு இருந்தன என்பதும், அப்பெயர்களுக்கு முன்னர் 'திரு' என்ற சொல்லே அடைமொழியாகத் தவறாது எழுதப்பட்டதென்பதும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் தம் பத்திப் பனுவல்களில் இறைவனை தமிழ்ச் சொல்லாலேயே விளித்துப் பாடினர் என்பதும், அவர்கள் இறைவனை எங்கனும் 'திரு' என்னும் அடைகொடுத்துப் பாடினரே அன்றிப் பிற மொழியில் அடைகொடுத்திலர் என்பதும், அவர்கள் செந்தமிழ் மாலைகளால் போற்றிய தமிழ்ப்பெயரே அவ்வக் கோயில் கல்வெட்டுகளிலும் பதியப்பட்டன என்பதும்; அக்கல்வெட்டுகளிலும் 'திரு' என்ற அடையே பெருவழக்காகப் பொறிக்கப்பட்டுள்ளது என்பதும், தமிழகத்தில் வந்து வாழ்வு பெற்ற வடமொழி மறையவர்களும், அவரைச் சார்ந்தொழுகுவாரும் இறைவனையும் கோயில்களையும் வடமொழிப்படுத்தி அதனுடன் 'ஸ்ரீ' என்னும், அடைமொழியைப் புகுத்தினர் என்பதும், ஏட்டிலும் எழுத்திலும்விட இவ்வடமொழி ஆட்சி மக்கள் வழக்கில் மிகுதியாக திணிக்கப்பட்டது என்பதும் வரலாற்று நோக்கில் ஆய்வார் நன்கு தெளிவர்.

எனவே, எங்கெல்லாம் தமிழ்ப் பெயர்கள் வடமொழி ஆக்கப்படும் புதிதாக வடமொழிப் பெயர் சூட்டப்படும் தமிழும் தமிழினமும் பாழ்படுத்தப்பட்டனவோ அங்கெல்லாம் "கெடலெங்கே தமிழின்நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க" என்னும் பாவேந்தரின் வியங்கோளுக்கு ஏற்பத் தமிழ் மக்களும், தமிழக அரசும் தலையிட்டுத் தமிழ் தழைக்கச் செய்தல் தலையாய கடமையாகும்.

(தொடரும்)

பழந்தமிழிசையும் இன்றைய நிலையும்!

எழில். இளங்கோவன்

உலகின் உயர்தனிச் செம்மொழி "தமிழ்மொழி" என்பது ஆய்வறிவுடையோரின் முடிபு! தமிழைத் தமிழனிடம் இருந்து கவர்ந்து அதில் கலப்புச் சொற்களை நுழைத்து அழிக்க முயலும் ஆரியப் பண்பாட்டின் மற்றுமோர் வடிவம்தான் இன்றை "கர்நாடக இசை." பண்டு தமிழிசையாகத தமிழரிடம் இருந்து பிறந்த இசை, இன்று தமிழிடம் இருந்து பறிக்கப்பெற்றுத் தெலுங்கு, சமற்கிருதம் போன்ற பிறமொழிகளின் ஊடாகக் கர்நாடக இசை என்று பார்ப்பன இசையாகவே மாற்றப்பெற்றுள்ளது என்பது தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னுமொரு மாபெரும் இழப்பு! அன்றைய தமிழிசை; இன்றைய கர்நாடக இசை, மேலோட்டமாக ஒருசில — இங்கே பார்ப்போம்!

'ழ' கர இடையன எழுத்து தமிழின் தனிச் சிறப்பு எழுத்து. தமிழ் இசைக் கருவிகளில் தோல் கருவிக்குப் பெயர் 'முழவு' துளைக்கருவிக்குப் பெயர் 'குழல்'. நரம்புக் கருவிக்குப் பெயர் 'யாழ்'. தமிழ் என்ற (மொழி) சொல்லுக்கும், அதன் தொன்மை இசைக்கும் உள்ள தொடர்பு எத்தன்மையது என்பதை இந்த ழகர ஒற்றுமை மிக நுணுக்கமாக காட்டுகிறது என்பதைச் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் எவரும் உணரலாம். 1917ஆம் ஆண்டு 1200 பக்கங்களில் தாம் வெளியிட்ட 'கருணாமிருத சாகரம்' என்னும் நூலின் ஆசிரியர் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர், "உலகில் இசை பிறந்தது தமிழரிடம் இருந்துதான்; தமிழில் இருந்துதான்" என்று கூறுவதும், பழந்தமிழ் இலக்கியங்களின் உரையாசிரியர்கள், குறிப்பாகச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் தம் உரையில் பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், பஞ்சபாரதீயம் போன்ற தொன்மைத் தமிழிசை நூல்களைச் சுட்டிக்காட்டியிருப்பதும் நோக்குத்தக்கன. இன்றைய கர்நாடக இசையின் வேராக இருந்ததும் இருப்பதும் தமிழிசைதான் என்பதே ஆணித்தரமான உண்மை!

தமிழிசையை ஏழிசை என்று இசைமரபில் பிரித்துக் கூறுவர், இசைவாணர். தோல் இசைக் கருவியாகிய முழவில் இசையொலிப் பிரிவு ஏழு; துளைக்கருவியாகிய குழலின் காற்றுத்துளைகள்ஏழு; நரம்புக் கருவியாகிய யாழின் நரம்புகளும் ஏழு; இத்தொடர்புடன் இயைந்து தமிழின் இசைப்பிரிவுகளும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழாக, ஏழிசையாக வகைபடுத்தப் பெற்றுள்ளன.

இவ்வேழிசைக்கும் உரிய இசை (நரம்பு) எழுத்துகள் ஆ — ஈ — ஊ — ஏ — ஐ — ஓ — ஔ ஆகிய இவை ஏழே என்பதையும் பிங்கலம் (1416) உறுதி செய்கிறது. இத்தமிழ் ஏழிசை பின்வந்தன் நாளில் மறைக்கப்பட்டு, பின்வந்த காலங்களில் வாழ்ந்ததாகச் சொல்லப்பெறும் பரதமுனி, மதங்கமுனி, நாரதர், பத்த செயதேவர், போன்ற பார்ப்பன(ர்)ப் பெயர்களால் உருமாறச் செய்துவிட்டது ஆரியம்!

குரல் முதல் தாரம் வரையிலான தமிழிசையை சட்சம் முதல் நிசாதம் வரையிலான 'சப்தசுரங்க' ளாக ஆக்கி, ஆ முதல் ஔ வரையலான இசை நரம்பொலி எழுத்துகளை சரிகமபதநி என்று 'சுர' எழுத்துகளாக ஆக்கித் தமிழிசை ஆரியக் கர்நாடக இசையாக ஆக்கிக் கொள்ளப்பட்டது. இப்போது அலகு அல்லது மாத்திரை என்ற ஒலி அளவின் அடிப்படையில் இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

தமிழிசையில் : குரல் - 4; துத்தம் - 4; கைக்கிளை - 3;
உழை - 2; இளி - 4; விளரி - 3;
தாரம் - 2 = மொத்த அலகு 22.

வடமொழியில்: சட்சம் - 4; ரிசபம் - 3; காந்தாரம் - 2;
மத்திமம் - 4; பஞ்சமம்-4; தைவதம் - 2;
நிசாதம் - 2 = மொத்த அலகு இங்கும் 22.

இந்த இரண்டு அலகுகளின் எண்ணிக்கை (தனித்தனியாக) இருபத்திரண்டு என்று இருந்தாலும் இங்கு ஒரு வேறுபாடு இருக்கிறது. அஃதாவது தமிழிசையில் வரும் இரண்டாவது மூன்றாவது நான்காவது இசைப் பெயர்களான துத்தம், கைக்கிளை, உழையின் அலகு 4:3:2 என்று வருகிறது. ஆனால் வடமொழியில் இதே நிலையில் உள்ள ரிசபம் காந்தாரம், மத்திமம் ஆகியவற்றின் அலகு 3:2:4 என்று வேறுபடுகிறது. இது வேறுபாடு அன்று; தமிழிசையுடன் வடமொழிச் 'சங்கீதம்' கொள்ளும் நேர் முரண்பாடு! எங்ஙனம்?

குரல் முதல் தாரம் வரையிலான இசை நரம்புகளில் 2 - 7 இணை நரம்புகள்; 3-6 பகை நரம்புகள்; 4 நட்பு நரம்பு; 5 கிளை நரம்பு என்பது இசை இலக்கணம். இங்கே கிளைநரம்பு 5 ஐ எடுத்துக்காட்டாக வைப்போம்.

தமிழிசையின் முதல் நரம்பு குரல். குரலில் இருந்து ஐந்தாவது நரம்பு இளி. எனவே குரலுக்குக் கிளை இளி - அலகு - 4.

இளியின் (ஐந்தாவது) கிளை துத்தம் - 4;
துத்தத்தின் கிளை விளரி - 3;
விளரியின் கிளை கைக்கிளை - 3;
கைக்கிளையின் கிளை தாரம் - 2;

தாரத்தின் கிளை உழை - 2;
மீண்டும் உழையின் கிளை குரல் - 4;

இதே அளவுகோலை வடமொழி இசையில் பொருத்தினால்,

சட்சமத்தில் பஞ்சமம் - 4;
பஞ்சமத்தில் ரிசபம் - 3;
ரிசபத்தில் தைவதம் - 2;
தைவதத்தில் காந்தாரம் - 2;
காந்தாரத்தில் நிசாதம் - 2;
நிசாதத்தில் மத்திமம் - 4;
மீண்டும் மத்திமத்தில் சட்சமம் - 4;

இந்த அலகுகளை ஒப்புநோக்கினால் தமிழிசை அலகுகளாக 4 - 4 - 3 - 3 - 2 - 2 - 4 ; வடமொழி இசையின் அலகுகளாக 4 - 3 - 2 - 2 - 2 - 4 - 4 என்று கிளை நரம்புகளின் அலகுகள் முரண் அடைந்து வைப்பு முறையில் குழறியும் வருகிறது. இவற்றால் இசை நெறி பிறழும். ஆகவே ஆரியம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முனைகிறது.

'ஒன்றை அழிக்கத் தான் அதுவாகவே மாறும்' ஆரியப் பண்பாட்டுப்படி தமிழிசை நரம்புகள், அதன் வைப்பு முறை, அவற்றின் அலகுகளுக்கு ஏற்பத் தன்னை மற்றிக் கொள்கிறது இப்படி:

சரிகமபதநி என்ற வைப்பு முறையை மாற்றி சட்சமத்தை ஐந்திலும், ரிசபத்தை ஆறிலும், காந்தாரத்தை ஏழிலும், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிசாதம் ஆகியவற்றை முறையே 1,2,3,4 ஆம் இடத்திலும் வைத்துத் தமிழிசை அலகுகளை உள்வாங்க முனைகிறது.

வடமொழி இசையின் வைப்புமுறைப்படிப் பார்த்தால் கிளை நரம்புகளில் அலகுகள் 4; 4; 3; 3; 2; 2; 4 தமிழிசை நரம்பலகுகளுடன் பொருந்தியே வருகிறது. இந்த அலகுகளின் அடிப்படையில் தமிழிசையான குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம் —— ம - ப - த - ந - ச - ரி - க என்றும்; உழை - இளி - விளரி - தாரம் - குரல் - துத்தம் - கைக்கிளை —— நி - ச - ரி - க - ம - ப - த என்றும் இசைத்தோற்றம் பெற்று இணை, பகை, நட்பு, கிளை நரம்புகளுடாகப் பண்கள் பிறக்கின்றன.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் ஓர் அருமையான காட்சி. ஆய்ச்சியர் குரவையில் நடனப் பெண்கள் எழுவர். இவர்கள் மேற்கு

எதிர் முகமாக குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வரிசையாக நிற்பர். இந்த ஏழு பெண்களும் ஆடும்போது ஒருகால் இடத்தில் நின்றவர் மற்றொருகால் வலத்திலும், வலத்தில் நின்றவர் இடத்திலுமாக மாறிமாறி ஆட, இவ்வாட்டச் சக்கரத்தில் முதலில் தோன்றுவது தாரம். பின் தாரத்தில் உழை; உழையில் குரல்; குரலில் இளி; இளியில் துத்தம்; துத்தத்தில் விளரி; விளரியில் கைக்கிளை; மீண்டும் தாரம். இப்படி உருவெடுக்கும் இசைமரபுடன் இயைந்த ஆடலில் பாலைப்பண், குறிஞ்சிப்பண், மருதப்பண், நெய்தற்பண், முல்லைப்பண் என்று விரிவு பெறும். இதற்குள் நுழைந்து கொண்டு இருப்பதுதான் இன்றைய வடமொழிக் கர்நாடக இசை ஓர் எடுத்துக்காட்டு:

குரல் குரலாகியது செம்பாலை (முல்லை) — இது காம்போதி

துத்தம் குரலாகியது படுமலைப்பாலை (குறிஞ்சி) இணை; நடபைரவி

கைக்கிளை குரலாகியது செவ்வழிப்பாலை (கைக்கிளை) பகை; மத்திமாவதி

உழை குரலாகியது அரும்பாலை (பெருந்திணை) நட்பு; சங்கராபரணம்

இளி குரலாகியது கொடிப்பாலை (மருதம்) கிளை; கரகரப்பிரியா

விளரி குரலாகியது விளரிப்பாலை (நெய்தல்) பகை; தோடி

தாரம் குரலாகியது மேற்செம்பாலை (பாலை) இணை; கல்யாணி

பழந்தமிழிசையில் 11,991 இசைப்பண்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் செய்தி தருகிறது. இன்றைய கர்நாடக இசைவாணர்களோ, கிளை அராகங்கள் (சன்ய இராகங்கள்) — 100 என்றும், முதன்மை (மேளகர்த்தா) அராகங்கள் 72 என்றும், மெட்டுகள் 96 என்றும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். பெயர்களை வடமொழியில் சொல்லிக்கொண்டு இருந்தாலும் இவை தமிழிசையின் பிறப்புகளே என்பதில் ஐயம் இல்லை. ஆனால் எண்ணிலடங்கா இசைப்பண்கள் அழிக்கப்பெற்றன, எரிக்கப் பெற்றன, மறைக்கப்பெற்றன என்பதே உண்மை.

பண், தாள இசைகளுக்கு ஏற்ப இளங்கோ அடிகளாரால் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தின் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, குன்றக் குரவை மற்றும் பரிபாடல் பாடல்களின் மூலம் தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைத் தெளிவாகவே தெரிந்துகொள்ளலாம்.

வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் முறையே செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை

என ஓசைவழித் தன்மைகளுக்கு ஏற்ப செய்திகளைச் சொல்லும் பாக்களின் இனம். இப்பாவகையில் உயர்வும் இல்லை தாழ்வும் இல்லை. ஆனால் பாக்கள் வழியில், இசையின் வழியில் சாதியைப் புகுத்தும் ஆரியத்தின் உண்மை நிலைப்பாடுதான் என்ன? ஒன்றைமட்டும் தெளிவாகக் கூறலாம். தமிழர் கண்ட கலையில் சாதியை நுழைத்துத் தமிழை மாய்க்க முயன்று தமதாக்கச் செய்யும் சூழ்ச்சியே தமிழரின் தமிழிசையைக் 'கர்நாடக சங்கீதம்' என்று ஆக்கியது. இறுதியாக ஒன்றைச் சொல்வோம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வடபுலத்தில் வேறு எந்த நாட்டிற்கும் இல்லாத சிறப்பாக, மூன்று புறங்களிலும் கடல் சூழ்ந்த (கடற்) கரைநாடு என்ற சிறப்பு தமிழ்நாட்டிற்கே உரியது. இந்தக் கரை நாட்டில் உருவான இசையே தமிழிசை. கரைநாட்டு இசை — கருநாட்டு இசை - கர்நாட்டு இசை - கர்நாடக இசை என்று மருவிவந்த இந்தப் பெயரே தமிழ்நாட்டின் இசை. தமிழர்களின் இசை கர்நாடக இசை என்பதைத் தெளிவு படுத்துகிறது என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறார் முத்தமிழ்க் காவலர் கி. ஆ.பெ. அவர்கள்!

இவற்றை நெஞ்சில் இருத்தி கர்நாடக இசை ஆரியர்க்கு உரியது அன்று, தமிழர்க்கு உரியது என்பதை தமிழ்மக்களுக்கும் உலகுக்கும் உணர்த்தி, தமிழிசையைத் தமிழில் நிகழ்த்தி தமிழகம் முழுதும் பரவ ஆன்றோரும் அறிஞர்களும் தமிழ் இசைவாணர்களும் முன்வரவேண்டும்!

●

புலவர் சிவசங்கு மறைவு!

தமிழறிஞரும் தென்மொழித் தொண்டரும் நம் பாவலரேறு ஐயா அவர்களின்மேல் தணியாத பேரன்பு கொண்டவருமான ஏரல் புலவர் ச. சிவசங்கு அவர்கள் சிலநாள் நோய் வாய்ப்பட்டிருந்து கடந்த சனவரி மாதம் 5.1.97 அன்று மறைவெய்தினார் என்னும் செய்தி கேட்டு ஆறாத்துயரம் கொண்டோம். அவர், ஏரல் கொற்கைத் தமிழ்மன்றம் - ஏழாம் ஆண்டுத் தமிழ்த் தொண்டின் நினைவாக அவ்வூரில் திருவள்ளுவப் பெருமானின் எழிலொழுகும் திருவுருவச் சிலையை நிறுவி, பாவலரேறு ஐயா அவர்களால் திரை நீக்கம் செய்வித்தது நினைவுகூரத் தக்கது. அப்பெருந் தொண்டர் மறைவினால் வருத்தமுற்றிருக்கும் அவரின் அன்புத் துணைவியாருக்கும், குழந்தைகளுக்கும் உறவினர்களுக்கும் தென்மொழி அன்பர்களுக்கும், தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தூயதமிழ் விளங்கவில்லை என்றால் கலப்புத்தமிழ் விளங்குகிறதா?

ஆதியமான்

தமிழர்களுடைய தாய்மொழி தமிழ். இம்மொழி கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய மூத்த மொழி என்று நீண்ட காலமாகப் பேசி வருகிறோம். தமிழ்மொழி இயற்கை மொழி என்று மொழி வல்லுநர்கள் ஆய்ந்தும் கூறிவிட்டார்கள். இம்மொழி இலக்கியச் செழிப்பும் இலக்கணச் செறிவும் கொண்டமொழி என்பதற்கு தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணங்கள் சான்று கூறுகின்றன. மாந்தர் வாழ்க்கை செப்பமுற அமையத் தமிழ் மொழியில் அறநெறி நூல்கள் பல உள்ளன என்பதனயும், அறிந்துகொண்டோம். எழுத்துகளில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுச் செப்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது; என்பதற்கு உலக மொழி யறிஞர்கள் சான்று கூறிவிட்டார்கள். சொற்களின் பலுக்கல் முறைகளால் இது ஒரு தனித்தன்மை வாய்ந்தது என்று மொழி வல்லுநர்கள் எடுத்துக் கூறிவிட்டார்கள்.

வெளிநாட்டினரை ஈர்த்துத் தமிழில் இலக்கண இலக்கிய நூல்கள் பல இயற்றி இருப்பதின் பெருமைகளை வாயாரப் புகழ்ந்தும் பேசிவிட்டோம். சில பிற மொழிகள் போன்று பிறமொழிக்கலவை தமிழுக்குத் தேவையில்லை என்பதையும் உணர்ந்துகொண்டோம். தமிழ் எந்த ஒரு மொழியின் துணையுமில்லாமல் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றது என்பதை உலகறியக் கூறிக்கொண்டே இருக்கிறோம்.

ஆனால் தமிழ்மொழி ஆட்சிமொழியாகத் தமிழகத்திலேயே இல்லை. வேர்வை சிந்தக் கல்லுடைத்து மண்சுமந்து உயர்ந்தபல கோபுரங்களைக் கட்டிய தமிழர்களின் கோயில்களில் தமிழ் வழிபாட்டு மொழியாக இல்லை. அற மன்றங்களில் தமிழில் வழக்குரைக்க முடியவில்லை. பள்ளிகளில் தமிழ் முழுப் பயிற்றுமொழியாக இல்லை. பேசும்போதுங்கூடத் தூயதமிழில் பேச மனமற்ற தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழில் பேசுபவர்களைத் தமிழர்களே பகடி செய்து நகைத்துத் தமிழுக்குத் தமிழர்களே பகைவர்களாய் உள்ளனர். தமிழன் எனக்குத் தமிழில் பேசவராது என்று பெருமைப்படப் பேசி வருகிறான். இப்படிப்பட்டநிலை தமிழர்கள் வாழும் தமிழகத்தில் இருப்பதைக் கண்டு நாணவேண்டி வருகிறது. கூனி நடக்கவேண்டிய நிலை இருக்கிறது.

ஏறத்தாழ இருபத்தொன்பது ஆண்டுகள் தமிழ்மொழிப்பற்றுள்ள கட்சிகளின் ஆட்சி தமிழகத்திலிருந்தும், தமிழ் மொழி உலக மொழிகளில் செம்மொழி என்ற ஒரு தகுதியைப் பெற முடியவில்லை. யாராலும் பேசப்படாத சமற்கிருதமொழி செம்மொழித் தகுதியைப்

பெற்றுள்ளது. ஐந்து கோடிக்கும் மிகுதியாக வாழும் தமிழர்களுடைய மொழி தமிழ் இன்னும் செம்மொழித் தகுதியைப்பெறவில்லை. இந்திய அரசியல் சட்டம் 347ல் மாநிலமொழிகளை ஆட்சி மொழியாக ஆக்க வகை இருந்தும். அச்சட்டமும் பயன்படவில்லை. அப்படியானால் இதில் உள்ள கோளாறுதான் என்ன? அரசியலில் வல்லாண்மை செய்யும் பார்ப்பனர்கள் தமிழுக்குப் பகையாக இருப்பதேயாகும். இவர்கள் மற்ற மாநில மக்களிடம் காட்டும் காழ்ப்புணர்ச்சியைக் காட்டிலும் தமிழர்கள்மீது மிகுதியான பகை உணர்ச்சியோடு செயல் படுத்துவதை அப்பட்டமாகக் காணமுடிகிறது. இப்பார்ப்பனர்களை இங்குள்ள அரசியல் தலைவர்கள் கண்டுகொள்வதே இல்லை. தங்களுடைய பதவிகளைக் காப்பாற்ற அவர்களைத் தழுவவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதனாலேயே தமிழ்மொழிக்கு ஒரு ஏற்றத்தைக் கொடுக்கமுடியவில்லை. தமிழ்நாட்டிலேயே பிறந்து தமிழைக் கற்று அதன்வழிப் பிழைப்பு நடத்தும் பார்ப்பன ஏட்டாளர்கள் தமிழ் வளர்ச்சியைப் பகடி செய்கிறார்கள் என்றால் அவர்களுடைய நன்றிகெட்ட செயலைக் கண்டிக்காமல் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதே பொருளாகும். இப்படித் தமிழைப் பழிக்கும் பார்ப்பனர்களைக் கடுமையாக எதிர்க்கத் தமிழர்கள் ஒற்றுமையுடன் முன்வராவிட்டால் தமிழைப் பழித்துக் கொண்டேதான் இருப்பார்கள். நாமும் அதனைக் கேட்டுக்கொண்டு கொட்டாவி விட்டுக்கொண்டு இருக்கவேண்டியதுதான்.

இப்போது தமிழகத்தை ஆளும் தி.மு.க ஆட்சியில் தமிழ் வளர்ச்சிக்கென ஒரு தனி அமைச்சர் இருக்கிறார். அவர் தமிழ்ப்பற்றாளர். அவர் எடுக்கும் முயற்சிகளைப் பார்ப்பனர்கள் பகடி செய்வதாகச் செய்திகள் வருகின்றன. அதை எண்ணும்போது தமிழர்கள் மொழிப்பற்றற்றவர்களாகவும் எவ்வளவு கோழையர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கவலைப்படவேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் வணிக நிலையங்கள் மற்றும் பல அறிவிப்புப் பலகைகளில் தமிழில் பெயர்களையும், விளம்பரங்களையும் எழுத வேண்டுமென அரசு அறிவித்திருக்கிறது. அந்த அறிவிப்பைத்தான் பகடி செய்யும் நிலை உள்ளது. தமிழில் மாற்றும் போது பிறமொழிச் சொல்லை நீக்கினால் விளங்கிக்கொள்ள முடியாது எனக் கூறப்படுகிறது. இதில்தான் சூழ்ச்சி இருக்கிறது. இங்கேதான் தமிழ்ப் பகைவர்களைக் காணமுடிகிறது. பல ஆண்டுகளுக்கு முன் வழங்கிவந்த பல பிறமொழிச் சொற்கள் தூயதமிழில் மாற்றப்பட்டதையும் அது வழக்கத்தில் பேசப்படுவதையும் நன்கு அறிந்தும் இப்படிப் பேசிவருதல் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்பதை உணரமுடிகிறது. முன்னால் சென்னை இராசதானி என்றிருந்த பெயரைத் தமிழ்நாடு என்று மாற்றவில்லையா? அது வழக்கத்தில் பேசவும், எழுதவும் படவில்லையா? இப்படி எத்தனையோ சொற்கள் தூய தமிழில்

மாற்றப்பட்டு பேச்சுவழக்கில் வந்துள்ளன என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

தனித்தமிழ்ச் சொற்கள் விளங்கவில்லை என்றால் இப்போது தமிழ் இதழ்களில் வரும் பிறமொழிச் சொற்கள் எப்படி விளங்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம்.

தமிழகத்தில் உலா வரும் தமிழ்த் தாளிகைகளில் வந்த சில சொற்கள் விளங்குகின்றவா எனக் காண்க.

1. க்வாலிஃபிகேஷன் 2. சாஸ்த்ரக்ஞர்களாகவும் 3.இன்ஃப்ளுயென்சை 4. காம்பிளிமெண்ட் 5. ஐடியலிசத்துக்கும் 6. த்ரீஸ்டார் நியூஸ் 7. அவுட்டோர் ஷூட்டிங் 8. ஸ்டேல்மேட் 9. ஜீவன்டோன் 10. ஹோம்பிலியாக 11. சென்சிட்டிவான 12. ரௌத்ரம் 13. சென்டிமெண்டலாக 14. அன்ரொமாண்டிக் 15. ஜெனிஃபர்லைப் பாத் டப்பில் 16. காம்ப்ரமைஸாசகம் 17. எக்ஸ்ராகான்ஸ்டியூஸனல்

மேலே கண்டவற்றைப்போலத் தாளிகைகளில் மிகுதியான பிறமொழிச் சொற்கள் எழுதப்பட்டு அச்சியற்றப்படுகின்றன. சிற்றூர்ப்புற மக்களுக்கு இச்சொற்களும் இந்தச் சொல்லாட்சியும் புரியுமா? படித்தவர்களுக்கே புரிவதில்லை. தமிழ்எழுத்துகளை வலுக்கட்டாயமாக எடுத்து எழுதுவதால் என்ன பயன் என்பதை இதழ்கள் உணர வேண்டும்.

இன்னும் சில பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்சொற்களை எழுதினால் புரியாமலா போகும்? கீழே காண்க.

1. பரிச்சயம் = பழக்கம். 2. நட்சத்திரம் = விண்மீன் 3. சுத்தம் = தூய்மை 4. சுயநலமிகள் = தன்நலக்காரர்கள். 5. நிபந்தனை = கட்டுப்பாடு 6. தினம் = நாள் 7. ரோடு = சாலை 8. போலீஸ் = காவலர் 9. ஜாஸ்தி = மிகுதி 10. அவஸ்த்தை = துயர் 11. ஸ்நானம் = குளிப்பு 12. ஆர்டர் = உத்தரவு 13. கரத்தை = கையை 14. கிராமம் = சிற்றூர்.

மேலே கண்ட பிறமொழிச் சொற்களை எழுதுவதை விடத் தமிழில் எழுதுவதால் புரியாமலா இருக்கிறது?

இதைவிட ஒரு கொடுமை தமிழ் எழுத்துகளை கொலை செய்து புதைத்து விட்டு எழுதுவதை எண்ணிப் பார்க்கவேண்டும். 4.7.96 குமுதம் இதழின் பக்கம் 75 இல் காதல் வேலி என்று எழுதுவதற்குப் பகரமாக காdhal வேli எனவும் பக்கம் 127இல் பெண்ணிடம் பிடித்தது என எழுதுவதற்குப் பகரமாக Pen ணி dam Pi டித்த dhu? எனவும் பக்கம் 128இல் திருடன்யார்? என்று எழுதுவதற்குப் பகரமாக திரு don yaa ர்? என்று அச்சிடப்பட்டிருக்கிறது. மேலேகண்ட சொற்களில் வர வேண்டிய எழுத்துகள் தமிழில் இல்லையா? அல்லது கிறுக்குப் பிடித்து இப்படிக் குளறுபடிகள் நடத்துகின்றனரா?

வேறு நாட்டில் சென்று அந்த நாட்டு மொழியைக்கற்று அதன்வழிப் பிழைப்பு நடத்தும் இதழ் ஆசிரியர்கள் அந்த நாட்டு

மொழியைப் பகடி செய்து கிறுக்குத்தனமாக எழுத்துச் சிதைவைப் பரப்பினால் அந்நாட்டவர் என்ன செய்வார்கள்? எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழுக்கு இப்படிப்பட்ட எதிரிகள் இருந்தால் எப்படித் தமிழை வளர்க்க முடியும்? தமிழக அரசு இப்படி எழுதுவதை இன்னும் எவ்வளவு காலத்திற்குப் பார்த்துக் கொண்டிருக்குமோ? தெரியவில்லை. தமிழ் மொழியின் வளம் பெருக்கும் செந்தமிழ்ச் செல்வி இதழிலும் கூட மிகுதியான அயன் மொழிச் சொற்கள் கலந்து எழுதப்படுகின்றன. ஆசிரியர் பெற்றுள்ள பட்டத்தின் பெயர் தமிழ்ப் படுத்தப்படவில்லை. தமிழகத்தில் வரும் தாளிகைகளில் விளங்காத பிறமொழிச் சொற்களை எழுதிக்கொண்டு தூயதமிழ்ச் சொற்களைப் புரியாது எனப் பகடி செய்வது கிறுக்குத்தனமானதும் தமிழ்மீது கொண்ட கரவான எண்ணமுமேயாகும். வேறில்லை. மேலும் தமிழர்களிடம் விழிப்புணர்ச்சி இருந்தால் இப்படி எழுத முடியுமா? பாவலரேறு பெருஞ்சித்திரனார் இருந்திருந்தால் இப்படி எழுதுவதைத் தடுக்க ஒரு போராட்டமே தொடங்கி இருப்பார்.

இரங்கல்கள்

ப. அர்த்தநாரீசுவரன் - மறைவு!

தென்மொழிப் பற்றாளரும், ஐயா அவர்களின் மேல் பேரன்பு கொண்டவருமான வெள்ளோடு ஆசிரியர். ப. அர்த்தநாரீசுவரன் அவர்களின் மறைவுற்ற செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் மறைவிற்கு, அவரின் துணைவியாருக்கும் குடும்பத்தினரும் அன்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

கதிர்ச்சிவன் - மறைவு!

தென்மொழிக் கொள்கை மறவரும் தொண்டருமான புதுவை கதிர்ச்சிவன் அவர்கள் அண்மையில் மறைவுற்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகிறோம். அன்னாரின் துணைவியாருக்கும் குடும்பத்திற்கும், அன்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

த. அன்பழகன் தங்கை - மறைவு!

தென்மொழியின் முன்னாள் அமைச்சரும், அன்பரும், தொண்டருமான த. அன்பழகன் அவர்களின் தங்கை மறைவுற்றமையறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரின் கணவருக்கும் குழந்தைகளுக்கும் உறவினர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஆய கவலைகளில் மூன்று.

ஞான. தோமா. க. மு.

முனைவர். ஆறு அழகப்பன் அவர்கள் தமிழின்பால் அறுபத்து நான்கு கவலைகள் கொண்டமை பாராட்டிற்குரியது. அடுத்த நூற்றாண்டில் தமிழ்மொழி நிலை நிற்குமா என்பது இன்றைய கவலை. முனைப்பான, உருப்படியான செயல் திட்டங்கள் வகுத்து செயல்படவில்லையெனில் இப் பார தீய நாட்டில் தமிழ் உயர்வாழல் அரிதே. தமிழக ஆட்சி மற்றும் செய்தித் துறைகளில் தமிழ்ப் பகைவர்களே மிகுதி. தமிழ் இலக்கணத்தைப் புறக்கணித்து, தமிழை ஒதுக்கும் எழுத்தாளர்களும் செய்திகளும் மிகுதி. இத்தகையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். மழலைப்பள்ளிப் படிப்பும், தொடக்கப் பள்ளிப்படிப்பும் தாய் மொழியாம் தமிழிலேயே இருத்தல் வேண்டும். இவற்றைச் செயல்படுத்தித் தமிழைக் காத்திட தமிழகம் தவறுமே யானால் பின் விளைவு . . . . ஐயகோ: இரு மொழிக் கொள்கையினைப் பின்பற்றும் தமிழகத்தில் நடுவணரசுத்துறைகளில் இந்தியே கோலோச்சுகிறது. குமரி மாவட்ட நடுவணரசுத்துறைகளில் மலையாளம் ஆட்சி மொழியாக உள்ளது. தமிழரிடையே தமிழ் அறிவும் தமிழ்ப் பற்றும் அருகி வருகிறது.

இனிக் கவலைகள் அறுபத்து நான்கனுள் மூன்றின் மீது என் உடன்பாடின்மையைத் தென்மொழி வாயிலாகத் தெரிவிக்க விழைகிறேன்.

1. இனம் 31 - அயல்மொழிப் பலுக்கலுக்குக் கண்ட கிரந்த எழுத்துகளை தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே.

தமிழை ஒழித்துக்கட்ட ஆரியன் கண்ட உத்தியே வடவெழுத்துகள். இதனாலேயே மணிப்பிரவாள நடை தோன்றி, திராவிட மொழிகளும் தோன்றின. ஒழிக்கப்படும் நிலையில் இருந்த தமிழ், உயர்தனிச் செம்மொழி என்று கால்டுவெல்லார் ஆராய்ந்து நிறுவிட, தமிழரிடை விழிப்புணர்வு ஏற்பட்டது. மறைமலை அடிகளார் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். தேவநேயப்பாவாணரும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் தனித்தமிழைப் போற்றி வளர்த்தனர். தனித்தமிழே தென்மொழியின் கொள்கையாயிற்று. சில ஆண்டுகளுக்கு முன் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வடதமிழ் வரிவடிவங்கள் என்று ஓரிரு கட்டுரைகள் வெளியிட்டார்கள். பின்னர் கிரந்த எழுத்துகளை ஏற்றால் மணிப்பிரவாள நடையினை ஏற்றதாக அமையும். தமிழ்ப்பகைவர்களின் தமிழ் சிதைப்பினை நாமும்

ஏற்றுக்கொண்டதாகும். தனித்தமிழ்க் கொள்கை கைவிடப்பட்டதாகவும் ஆகும் என்றகருத்தினாற் போலும் அதனை நடைமுறைப்படுத்தாமல் விட்டார்கள்.

ஆங்கில மொழியில் ண,ந,ன ஆகிய மூன்று வடிவங்களுக்கும் ஒரு N தான் உண்டு. ல,ள,ழ ஆகிய மூன்று எழுத்துகளுக்கும் ஒரு L தான் உண்டு. அதற்காகத் தனி வடிவங்களை ஆங்கிலம் ஏற்கவில்லை. இந்தியில்கூட றனழளஎஒ, ஆகிய ஒலிகளுக்கு வடிவங்கள் இல்லையே. ஆளத்துடிக்கும் இந்தி கூட தமிழ்ச் சிறப்பெழுத்துகளுக்கு தனி வடிவம் ஏற்கவில்லை.

கிரந்த எழுத்துகளை ஏற்றுக்கொண்டோம் என்றால் தமிழ் ஒழிக்கப்பட்டாயிற்று என்பதே பொருள். எக் கரணியத்தை முன்னிட்டும் தமிழ் அறிஞர்கள் கிரந்த எழுத்துக்களை ஏற்றுக்கொள்ளுதல் கூடாது.

இனி அயல்மொழிகள் பலுக்கலுக்கு குறியீடுகள் தேவை. தமிழ் எழுத்துகளின் தொல்லை வடிவினையும் இலக்கண அமைப்பினையும் சிறிதும் மாற்றாமல் மெல்லொலி தோற்றுவிக்க ஒரு குறியும், கனைப்பொலி தோற்றுவிக்க இன்னொரு குறியும், குற்றியல் மேவும் புள்ளி என்னும் இலக்கண விதியினையும் ஏற்றுக்கொண்டால் புது வரி வடிவங்கள் ஏதுமின்றி அயல் மொழியின் ஒலிகளை எழுதிட முடியும். ஆயுத எழுத்து மாத்திரை கொண்டதாதலின் கனைப்பொலிக்கு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

> 1986-ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டு சிறப்பு மலரில் வெளியான "தமிழ்ச் சொல் விளக்கமும், எழுத்துச் சீர் திருத்தமும்" எனும் என் கட்டுரையில் மேற்காட்டிய மெல்லொலி, கனைப்பொலி குறியீடுகள் பற்றி குறிப்பிட்டுள்ளேன். 1978-ஆம் ஆண்டின் பொறியியல் கதிர் சிறப்பு மலரினும், பொறியியல் சங்க பவழ விழா மலரிலும் எழுத்துச்சீர்திருத்தம் பற்றிய எமது கட்டுரைகள் வெளிவந்துள்ளன. (அக்கட்டுரைகளின் சுருக்கம் தனியாக தென்மொழிக்கு அனுப்பிவைக்கப்படும்).

தமிழ் என்றும் அடிமை மொழி என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் வடவெழுத்துகளை ஒழிப்பதே தமிழ் அறிஞர்களின் முதற்கடன் ஆகும். அறிஞர் அழகப்பனாரும் அருள் கூர்ந்து இதனை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். கிரந்த எழுத்துகளைக் களைவோம்; தனித்தமிழ் காப்போம்.

2. இனம் 50. *அறிவியல் தமிழை வளர்ப்பார் ஆதரிக்கப்படவில்லையே*

முத்தமிழ் தவிர்த்து வேறு தமிழ் தேவையற்றது. புதுப்புது அறிவியற் சொற்களுக்குத் தமிழ்ச் சொல்லாக்கம்தான் தேவை. 'தமிழ்கள்' என்றும் சிலர் எழுதத்துணிந்துள்ளனர். பண்டைத் தமிழர் கண்ட, கொண்ட சொற்கள் அனைத்தும் ஆய்ந்து நோக்குங்கால் அறிவியல் கருத்தின் அடிப்படையானவை என்பது விளங்கும். உயிர், மெய், உயிர்மெய், ஆகிய சொல்லாட்சிகள் அறிவியல் சார்ந்தவையல்லவா! தம்மிடத்தினின்று இமிழ்கின்ற ஒலி தமிழ். தம் இமிழ் — தமிமிழ் — தமிழ். அலை அலையாய்ப் பாரிக்கும் ஒலி இமிழ் ஒலி எனப்படும். தமிழ் என்பதும் அறிவியல் கருத்தினைக் கொண்டது. மக்கள் உயிர்வாழ்வதினைப் பிழைத்தல் என்கிறோம். பிழை என்றால் தவறு அல்லது குற்றம் எனப் பொருள்படும். தவறு இழைப்பதே மாந்தப் பண்பு என்பது ஆங்கிலப் பழஞ்சொல். மாந்தன் உயிர் வாழ்ந்தால் பிழைகள் நேரும் என்னும் அறிவியல் கருத்தினை உள்ளடக்கி உயிர் வாழ்தல் என்பதற்குப் பிழைத்தல் என்னும் சொல்லினைக் கொண்ட பண்டைத் தமிழரின் மதி நுட்பத்தினை என்னென்போம். ஆய்ந்து நோக்குங்கால் பண்டைத் தமிழன் கண்ட சொற்கள் அனைத்தும் அறிவியல் கருத்தினை அடியாய்க் கொண்டவை என்பதற்கு ஐயமில்லை. அறிவியல் தமிழ் என்று தனியாக ஒரு தமிழ் தேவையில்லை.

3. இனம் 62 — 'புதுக்கவிதை' தோன்றியதுபோல தமிழிசையில் புதுப்பண்கள் தோன்றவில்லையே.

'புதுக்கவிதை' தமிழுக்கு இழுக்கு. 'புதுக்கவிதை' புனைவோர் யாப்பிலக்கணத்தினைப் புரட்டியும் பார்த்திரார். சீர்கள் கூடியும் குறைந்தும் வருவதற்கு யாப்பிலக்கணத்தில் வகை உண்டு. மக்கள் வாழ்வில் ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் வரையறை என்னும் இலக்கணம் உண்டு. தமிழ்க் பாவுக்கு மட்டும் இலக்கணம் வேண்டாவோ. தமிழை ஒழிப்பதையே குறியாய்க் கொண்டு உழலும் தறுதலைகள் தமிழ் யாப்பிலக்கணம் ஒழிந்தது என்று நனி மகிழ்கின்றனர். புதுக்கவிதைகளை உரை நடையின்பால் சேர்க்க வேண்டுமேயன்றிப் பா என்று கொள்ளல் வேண்டா.

பண்டைத் தமிழர் கண்ட பண்களும் அவற்றின் பெயர்களும் தமிழர் அறிந்திலர். பண்களை அறிந்து கொண்டாலன்றோ புதுப்பண்கள் இயற்றுவர்.

பாரதிய நாட்டிலேயே ஆரியத்திற்கு அடிமையாகித் தமிழும் தமிழ்க் கலைகளும் அழிவின் விளிம்பில் உள்ளன. இன்று இந்நிலையில் தமிழ் அறிஞர்கள் மயக்கம் கொள்ளுதல் வேண்டா.

பகை முடிக்க விரைவீர்!

(பாவலர் ப. எழில்வாணன்)

நல்லவர்போல் நற்றமிழை வளர்ப்பதுபோல் இன்றும்
நயமாகப் பலபேசி நடித்திங்குத் திரியும்
வல்லவர்கள் வஞ்சகர்கள் வாழ்கின்றார் பலராய்!
வளமார்ந்த வண்டமிழின் நலம்கெடுக்கப் பார்க்கும்
புல்லவர்கள் புறப்பாட்டுப் பாடுகின்றார்! தாமே
பொதுநலத்தில் திளைத்தவர்போல் ஊர்நம்ப வைத்துத்
தொல்லைகளும் தொண்டர்க்கே இழைக்கின்றார்! தமிழைத்
தொலைப்பதற்குத் தூங்காமல் அலைகின்றார் உணர்வீர்!

தன்னலத்தைப் பெரிதென்று பொழுதெல்லாம் எண்ணும்
தாழ்வான சிந்தனையால் தமிழ்த்தொண்டைப் பழித்துப்
புன்னலத்தைப் பொருள்நயப்பால் தமிழுணர்வை வீழ்த்தப்
பொய்ப்பந்தல் போடுகின்றார்; புதுமேடை அமைத்தே!
சொன்னபழங் கதைகளுக்குப் புதுவண்ணம் பூசிச்
சொலித்திடவே செய்கின்றார் தமிழ்மரபை மீறி!
அன்னவர்கள் செயலெல்லாம் ஆயந்தறிந்தால் நிலத்தில்
அருந்தமிழ்க்கே பெருங்கேடாம்; தமிழர்களே அறிவீர்!

தமிழ்நலத்தைப் பாராமல் பற்பலவாய் எழுதித்
தன்மானம் மண்வீழப் பகுத்தறிவை இழந்தே
இமிழ்கடல்போல் தமையெண்ணி மனம்போன போக்கில்
இன்றளவும் தமிழ்மொழியைக் கெடுக்கின்றார்! அவரே,
"அமிழ்தான தமிழென்றால் ஆங்கிலத்தைக் கலப்போம்!
அதுதானே எளிதாகப் புரியு"மெனக் கூறித்
திமிரெடுத்துத் திரிகின்றார்! செந்தமிழின் குருதி
சிலிர்த்தோடச் சினந்தெரிக்கும் மறவர்களே, எழுவீர்!

'எப்படியும் எழுதிடலாம்: இயன்றவரை தமிழின்
எழுத்ததிலே இருக்குமென்றால் அதுபோதும்' என்று
தப்படித்துத் தமிழ்வெறுப்பின் தலைபிடிக்க முயலும்
தடிமடையர் கெடுவினைகள் பொடிப்பொடியாய்ப் போகும்!
உப்பெடுத்து வயிரமென்றால் ஒப்பிடுவார் உளரோ?
உயிரெடுத்துப் போட்டாலும் தமிழென்றே உயிர்த்துக்
கொப்புளிக்கும் தமிழ்க்குருதி ஓடுகின்ற மறவர்
குலத்தினரே, இப்பகையை முடிப்பதற்கே விரைவீர்!

மக்களவை

நீங்கள் யார் பக்கம்

தென்மொழி ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

'தமிழ்கள்' தொடர்பான கருத்தாடலில் தோழர்கள் எழில்வாணன், தமிழநம்பி ஆகியோரின் கருத்துகள் கண்டேன் (தென்மொழி, திசம்பர் '96).

முந்தைய இதழில் நான் எழுப்பியுள்ள பல்வேறு சிந்தனைகளுக்கு நண்பர்கள் விடையளிக்காததால் அவற்றை எல்லாம் 'சரி' எனக் கருதி ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என நான் எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக என் கருத்துகளையும் நண்பர்கள் ஒரு பொருட்டாகக் கருதிச் சிந்தனையில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றே நம்புகின்றேன். மிக்க நன்றி. இனி நம்பியின் கருத்துகள் குறித்து:

1. ஒருவருக்குள்ளாகவே உள்ள பல கூறுகளில் அரசியல் நோக்கில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து 'மற்றதை விலக்கி' ஒவ்வொருவரும் செயல்பட்டு வருகிறோம் என்கிறார் நம்பி. இதை நான் ஏற்கவில்லை. அரசியல் நோக்கில் செயல்படும் நாம் ஒவ்வொருவரும் பல்வேறு தளங்களில் பல்வேறு 'மாந்தர்களாக' வாழ்வதே உண்மை. ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காக முடிந்ததைச் செய்யவேண்டும் எனக் கருதும் நான் வகுப்பறையில் மாணவர்களை ஒடுக்கும் ஆசிரியனாகவும், குடும்பத்திற்குள் மக்களையும், மனைவியையும் ஒடுக்கும் ஆணாகவும், இன்னும் பல்வேறு தளங்களில் பல்வேறு புனைவுகளை ஒருசேர ஏற்பவனாகவும் வாழ வேண்டியுள்ளது. எனவே சாதியம் குறித்துச் சரியான கருத்துகளைச் சொல்லக் கூடிய ஒருவர் பெண்ணியம் குறித்துத் தவறான பார்வைகள் கொண்டிருக்கலாம். பொதுப்படையாக மாந்தர் ஒருவரை முழுமையாக நல்லவர் / கெட்டவர்; புரட்சியாளர் / பிற்போக்காளர் என்றெல்லாம் வகைப்படுத்திவிட இயலாது. காரல் மார்க்சு போன்றோரிடமே ஐரோப்பிய நடுவ் (மைய)ச் சிந்தனைகள் இருந்தன எனவும் இலெனினிடமே ஆணாளுமைக் கருத்துகள் நிலவின எனவும் திறனாய்வுகள் மேற்கொள்ளப்படுவதை நினைவூட்ட விரும்புகிறேன். தனித்தமிழியக்க மரபிலேயே மறைமலை அடிகளுக்கும் பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்குமான வேறுபாடுகள்

முதன்மையானவை. தனித்தமிழ் குறித்துச் சரியாகச் சிந்தித்த அடிகளாரின் சிவனியக் கருத்துகளை நாம் ஏற்றுக் கொள்ள இயலுமா? தொழிற் கழக முன்னோடிகளில் ஒருவரான திரு.வி.க அவர்களைப் பெண்ணிய நோக்கில் போற்ற இயலுமா?

2. இயக்கங்களுக்கும் இது பொருந்தும். எனவேதான் ஒரே காலக் கட்டத்தில் வாழும் நாம் பல்வேறு இயக்கங்களில் நின்று செயல்பட வேண்டி இருக்கிறது. 'மக்கள் கல்வி இயக்கம்' குறித்து நம்பி விரிவாகப் பேசியுள்ளார். சாதி, பால், முதல், மொழி ஆகியவற்றின் அடிப்படையிலான பல்வேறு வல்லாண்மை நிலைகளை எதிர்த்த செயற்பாடுகளின், தொகுப்பான நடைமுறையின் வெளிப்பாடாக மக்கள் கல்வி இயக்கம் உள்ளதென்கிறார். விடுதலையை நோக்காகக் கொண்ட எந்த ஒரு இயக்கமும் அப்படித்தான் இருக்க முடியும் என்கிறார். நல்லது. அப்படியாயின் தமிழநம்பி அவர்கள் மக்கள் கல்வி இயக்கத்தில் சேர்ந்துவிடுவதுதானே! எதற்காக அவர் வேறொரு இயக்கத்தில் இருக்க வேண்டும்? தமிழ் வழிக் கல்வி உட்பட மொழி வல்லாண்மை நிலைகளை எதிர்த்துப் போராடக் கூடிய இயக்கமாக இருந்தாலும் ஏதோ ஒரு அடிப்படையில் அவர் மக்கள் கல்வி இயக்கத்தைக் காட்டிலும் தனித்தமிழ் இயக்கங்களிலொன்றைத் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை அவர் சிந்திக்க வேண்டும். மக்களின் குமுக நடைமுறையைப் பாருங்கள் என அறிவுரைக்கும் நம்பி மக்களின் நடைமுறைகள் இப்படிப் பன்மைக் கூறுகள் உள்ளதாகத்தான் இருக்கின்றன என்பதை உணர்தல் வேண்டும். எனவே பல்வேறு இயக்கங்கள் என்பது தவிர்க்க இயலாத ஒன்று. இதன் பொருள் சில பொதுக் குறிக்கோள்களுக்காக நாம் கூட்டணியாய் இணைந்து நிற்க முடியாதென்பதன்று.

3. 'நிறப்பிரிகை' சார்பாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வரங்கு பற்றியும் நண்பர் விரிவாகப் பேசியுள்ளார். 'சபால்டர்ன் ஸ்டடீஸ்' என்கிற ஆங்கிலச் சொல் மட்டுமே எங்களால் பயன்படுத்தப்பட்டது என நண்பர் சொல்வது முற்றிலும் தவறான செய்தி. 'விளிம்பியல் நோக்கு' 'விளிம்பியல் ஆய்வுகள்', 'அடித்தட்டு ஆய்வு' என்றெல்லாம் தமிழாக்கங்களை எங்கள் அறிக்கைகளில் பயன்படுத்தியுள்ளோம். புதிதாக அறிமுகம் செய்யும் போது இப்படி இரு மொழிகளையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. புழக்கத்திற்குக் கொண்டுவந்த பின்பு நாங்கள் தமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்துகிறோம். பழசையே பேசிக் கொண்டிருக்கும்போது இந்தச் சிக்கல் பெரிதாகத் தெரிவதில்லை. புதியதைத் தமிழுக்கு அறிமுகம் செய்யும்போது நடைமுறையில் நாம் இத்தகைய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அறிக்கையில் எழுதும்போது சொல்லப்படாத 'கறுப்பியம்' என்கிற சொல்லைத் தினமணி கதிரில் பயன்படுத்துவதைப்

பெரிய முரண்பாடாகச் சுட்டி மகிழ்கிறார் நம்பி. "கறுப்பியம், பெண்ணியம், 'தலித்தியம்' என ஒடுக்கப்பட்ட குரல்கள் உலகெங்கிலும் ஒங்கி ஒலிக்கும் காலம் இது" என்பது என் கூற்று. உலக அளவில் பேசும்போது 'கறுப்பியம்' எனச் சொல்வதில் என்ன தவறு கண்டார் நம்பி? தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

4. 'தென்மொழி'க்கு எழுதும்போது தூய தமிழிலும் 'ஞாநி'க்காக எழுதும் போது பிற மொழிச் சொற்களை விரவியும் எழுதுகிறேன் என்கிறார் நண்பர். தூய தமிழில் எழுதுவது என் வழக்கமில்லை. இதை நான் பெருமையோடு சொல்வதாக நினைக்க வேண்டாம். தற்திறனாய்வுடன் இதைக் குறிப்பிடுகிறேன். எனது நடைமுறை குறித்த ஒரு தரவாக இதனைச் சொல்கிறேன். நான் பேசுகிற மக்கள் தளம் இத்தகைய நடைமுறையை என் மீது திணிக்கிறது. தென்மொழியிலும் கூட எனது முதற் கடிதத்தை வழக்கமான நடையில்தான் எழுதினேன். அது திருத்தப்பட்டு வெளியிடப்பட்டதைப் பார்த்தபோது அடுத்த கடிதத்தில் தென்மொழி ஆசிரியரின் பணியைக் குறைக்கும் நோக்கில் நானே அதனைச் செய்து கொண்டேன். தவிரவும் தென்மொழி அன்பர்களிடம் பேசும்போது தனித்தமிழ் ஒரு சிக்கலாக இருப்பதில்லை என்பதை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. நடைமுறை என்பது இரட்டை நிலை/பன்மை நிலைக்கு ஆதரவாக உள்ளதையே இது காட்டுகிறது. தனித்தமிழ் இயக்கத்தின் முதன்மை முன்னோடி மறைமலை அடிகளாரிடமே இத்தகைய இரட்டை நிலையை நாம் காண முடியும். நடைமுறை வாழ்க்கையில் அவர் ஆங்கிலச் சொற்களைக் கையாண்டதையும் நாட்குறிப்பை ஆங்கிலத்தில் எழுதி வந்ததையும்கூட விட்டுவிடுவோம். தமது 'சிவஞானபோத ஆராய்ச்சி' நூல் முழுமையும் பக்கத்திற்குப் பக்கம் அவர் வடமொழிச் சொற்களைக் கையாண்டிருப்பதை என்னென்பது!

5. நான் எனது நாட்குறிப்பையோ, கடிதங்களையோ ஆங்கிலத்தில் எழுதாதது மட்டுமன்று கட்டுரைகளையும் கூட ஆங்கிலத்தில் எழுதுவதில்லை. அத்தகைய வாய்ப்புக்கள் வரும்போது கூட முன்னுரிமை அடிப்படையில் அவற்றைத் தவிர்த்து விடுகிறேன். கூடியவரை புதியசெய்திகளை, ஒடுக்கப்பட்ட மக்களின் நோக்கிலான கருத்துகளைத் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்துதலையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறேன். எனது குழந்தைகளைக் கூடத் தமிழ்வழிக் கல்வியில்தான் பயிற்றுவித்தேன். தமிழின் மீது யாரையும்விடப் பற்றுக் குறைந்தவன் அல்லன் நான். தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டுகள் அமைந்ததால் இதைச் சொல்ல வேண்டியதாயிற்று.

6. 'தலித்துகள்', 'பெண்ணியங்கள்' என்றெல்லாம் நான் எழுதுவதில்லையே என வியக்கிறார் நம்பி. அவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 'தமிழ்கள்' என்று கூடத்தான் நான் எழுதுவதில்லை. தமிழ் என்கிற ஒருமை கட்டமைக்கப்படும் போது அதில் எப்படி

பார்ப்பன-வெள்ளாள மேலாண்மை கோலோச்சுகிறது என்பதைச் சுட்டும்போது 'தமிழ்கள்' பற்றி நாம் பேச வேண்டியதாகிறது. அனைத்து இந்திய மேலாண்மை நம் மீது திணிக்கப்படும்போது பல்வேறு தமிழ்களையும், தமிழர்களையும் ஒன்றிணைத்து நாம் நிற்க வேண்டியதாகிறது. பறையர், பள்ளர், அருந்ததியர் என எல்லோரையும் இணைத்து 'தாழ்த்தப்பட்டோர்'(தலித்) எனச் சொல்லவும் வேண்டியிருக்கிறது. அவர்களுக்குள்ளேயே ஒரு பிரிவினர் கூடுதலாக ஒடுக்கப்படும்போது அப் பிரிவின் தனித்த நலன்கள் பற்றியும் பேச வேண்டியிருக்கிறது. பெண்ணியமும் அப்படித்தான். தாழ்த்தப்பட்ட பெண்களின் சிக்கல்களும், உயர்சாதிப் பெண்களின் சிக்கல்களும் ஒரே படித்தானவையல்ல. "இந்தியத் துணைக் கண்டத்தைச் சேர்ந்த அறிஞர்கள்" என எழுதுவதால் நான் அனைத்து இந்தியத்தை ஆதரிக்கிறேன் என்பதும் ஒரு பொருளற்ற கிண்டலே. இந்தியத் துணைக் கண்டம், ஆசியா, தெ.ஆசியா தெற்குலகம் என்றெல்லாம் மேலை வல்லாண்மைக்கெதிராக நிலவியல் முறையிலும் நாம் பேச வேண்டியிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் அனைத்தும் மூன்றாம் உலகின் பகுதிகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

7. இறுதியாக: சென்ற திசம்பர் 30, "இந்து" நாளிதழில் வந்த ஒரு செய்தியின்பால் உங்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அமெரிக்காவின் ஒடுக்கப்பட்ட மக்களாகிய கறுப்பின மக்கள் பேசும் ஆங்கில மொழியைத் (கறுப்பு ஆங்கிலம் - எபோனிக்சு) தனி மொழியாக ஒகலாந்து பள்ளக்குழு அறிவித்ததைக் கிளின்டன் அரசு நீக்கியுள்ளது. பேச்சு / இன வழக்குகளின் அடிப்படையில் ஆங்கில மொழியைக் கூறு போடலாகாது என 'இந்து' ஆசிரியர் தலைப்புக் கட்டுரையும் எழுதியுள்ளார். சொல்லுங்கள் நீங்கள் யார் பக்கம் - தமது தனித்தன்மையைக் காக்கப் போராடும் கறுப்பின மக்களின் பக்கமா? மொழி ஒருமையை வலியுறுத்தும் கிளிண்டன் அல்லது 'இந்து' ஆசிரியரின் பக்கமா?

நன்றியுடன்
அ. மார்க்சு

மணமகன் தேவை

28/156 - க.மு., மெய்.மு., கல்.இ. (எம்.ஏ., எம்.பில்., பி., பி.எட்.) - தனியார் பள்ளி ஆசிரியை - பிற்படுத்தப்பட்டவர் - மதுரை. படித்த அரசு/தனியார் வேலையிலுள்ள/தனித் தொழில் புரியும் முற்போக்கு எண்ணங் கொண்ட மணமகன் தேவை, சாதி, மதம் தடையில்லை.

தொடர்புக்கு: முனைவர் ந. அரணமுறுவல்
13/2, சுசபதி தெரு, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005.

செய்திகள்

நெடுஞ்செழியன் - பூங்கொடி வாழ்க!

தென்மொழியின் நெடுநாள் அன்புசால் வாழ்விணையரான வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் சின்னபள்ளிக் குப்பம் அரசுயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. குமர. தன்னொளியன் - விருப்பாட்சிபுரம் அரசு உயர் பள்ளித் தமிழாசிரியர் த. கலைவாணி ஆகியோர் மகன் செல்வன் நெடுஞ்செழியனுக்கும், கீழ்வல்லம் திரு.இராதாக்கிருட்டிணன் - பூங்கோதை வாழ்விணையரின் மகள் செல்வி பூங்கொடிக்கும் தி.பி. 20028 சுறவம் 7 அன்று (20.1.97) வேலூர் சுங்கச்சாவடி கே.எம். நாதன் திருமணமாளிகையில் சொல்லாய்வு அறிஞர் அருளியார் தலைமையிலும் புலவர் அரு. சுந்தரேசனார் முன்னிலையிலும் திருமணம் நடைபெற்றது. புலவர் வசி. இலக்குவனார் அறிமுகவுரையாற்றினார். மணமக்களை வாழ்த்தித் திருவாளர்கள் கு. முரஅரி, ம.செ. தமிழ்மணி, புலவர் வெ. மாசிலாமணி, திரு. நா. செந்தமிழ்க்கோ ஆகியோர் பேசினர். திரு. வ.சி. மகாவிட்டுணு நன்றி நவின்றார். மணமக்கள் வாழ்வாங்கு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

நல்ல - இரவிச்சந்திரன் - உமாபுவனேசுவரி வாழ்க!

தி. பி. 2028 சுறவம் 27 ஞாயிறு (9.2.97) அன்று நெய்வேலி திரு. நல்லப்பனார் - குப்பம்மாள் மகன் நல்ல. இரவிச்சந்தினுக்கும் திரு. பன்னீர் செல்வம் - கத்தூரி மகள் உமாபுவனேசுவரிக்கும் திருமணவிழா நெய்வேலி நகரம் 24 ஆம் வட்டம் - திருமணமண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் திருமண நிகழ்ச்சியை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். மணமக்கள் வல்லாங்கு வாழத் தென்மொழியின் வாழ்த்துகள்!

தமிழ்ச் சான்றோர் பேரவை தொடக்க விழா - இராசிபுரம்.

தி. பி. 2028., சுறவம் - 5 (18-1-97) அன்று மாலை 5 மணிக்கு இராசிபுரத்தில் - தமிழ்ச் சான்றோர் பேரவை தொடக்க விழா நிகழ்ச்சி திரு.ஆ. இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலும் திருவாளர்கள். பெ. சிதம்பரம், புலவர். ப. சுப்பண்ணன் அ. முத்துசாமி - ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. திருவாட்டி, இறை. பொற்கொடி குத்து

விளக்கேற்றிவைத்தார். திரு. இரா. தமிழ்ச்செல்வன் வரவேற்புரையாற்றினார், திருவாளர்கள். பாவை நடவரசன், புலவர். மு. கந்தசாமி, ஆகியோர் அறிமுகவுரை நிகழ்த்தினார்கள், தென்மொழி ஆசிரியர் - திருவாட்டி, தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்ச்சான்றோர் பேரவை நிகழச்சியைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். முனைவர் சு. சிலம்பொலி செல்லப்பனார் தமிழ்ச்சான்றோர் பேரவை இலச்சினையைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார், திருவாளர்கள் தி.செ. பழனிவேல், கு. இராமசாமி, கோ. வெங்கட்ராமன், திருவாட்டி. இளவேனில் பாலு (வசந்தாபாலு) மற்றும் பலரும் வாழத்துரை வழங்கினார்கள். பேரவையின் பொருளாளர் திரு. முருகானந்தம் நன்றி நவின்றார்.

தென்மொழி நன்கொடை வரவுகள்

(29/2/96 முதல் - 28/2/97 முடிய)

1)	தஞ்சை. நலங்கிள்ளி	அமெரிக்கா	-	2192.00
2)	கி. பெருமாள்	பல்லாவரம்	-	20.00
3)	செல்லையா	தெக்சாசு	-	500.00
4)	அர. வேள்பாரி	காளையார்கோயில்	-	25.00
5)	நலங்கிள்ளி	பொன்னேரி	-	30.00
6)	அன்பழகன் (மதியழகன் - அருள்மொழி இருவரின் திருமண நினைவு அன்பளிப்பு வரவு)	வேட்டரம்பட்டி	-	100.00
7)	ச.பா. விசுவாச்வரம்			40.00
8)	நலங்கிள்ளி	பொன்னேரி	-	28.00
9)	அரிமா வளங்கோ	பிரான்சு	-	992.00
10)	புலவர். நாவை. சிவம்	மணப்பாறை	-	500.00
11)	மரு. மல்லிகேசன்	போரூர்	-	48.00
12)	மாரிமுத்து	இலந்தக்குட்டை	-	2.00
13)	ப. எழில்வாணன்	பள்ளப்பட்டி	-	2.00
14)	புலவர். மு. கந்தசாமி	இராசிபுரம்	-	2.00
15)	கு. சோதிப்பிரகாசம்	இராசத்தான்	-	27.00
16)	வே. பொன்னையன்	சென்னிமலை	-	2.00
17)	கி. பெருமாள்	பல்லாவரம்	-	100.00
18)	நெய்வேலி - தொல்காப்பியன், தி.கு. வளவன், புலவர். கரு. நடவரசன், சுப. திருமாறன், நல்ல. இரவிச்சந்திரன் ரூ. 2.00 மேனி		-	10.00

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நம் ஐயா அவர்களின், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக வெளிவருகின்ற தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களில் **1986** வரையிலான இதழ்கள் கட்டடம் செய்யப்பெற்று சலுகை விலையில் தென்மொழி சுவடி 20 வரை மற்றும் தமிழ் நிலம் எண் 80 வரை விற்பனைக்கு உள்ளன.

அன்பர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பதிப்பகங்கள், நூலகங்கள், பள்ளி, கல்லூரிகள், இந் நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம். விற்பனை விளத்தங்கள் கீழ் வருமாறு கொடுக்கப் பெறுகின்றன.

தென்மொழி		விலை
1.	சுவடி - 6 முதல் சுவடி - 11 முடிய உள்ள இதழ்கள்	15-00
2.	சுவடி - 11 - தொகுப்பு (முழுமையாக)	15-00
3.	சுவடி - 12 - தொகுப்பு (முழுமையாக)	15-00
4.	சுவடி - 16 தொகுப்பு -	17-00
5.	சுவடி - 19 தொகுப்பு -	18-00
6.	சுவடி 20 தொகுப்பு -	20-00
7.	சுவடி 21 தொகுப்பு முழுமையாக -	17-00
8.	சுவடி 22 தொகுப்பு முழுமையாக -	17-00
9.	சுவடி 23 தொகுப்பு முழுமையாக -	25-00
10.	சுவடி 24 தொகுப்பு முழுமையாக -	28-00
11.	சுவடி 25 தொகுப்பு முழுமையாக -	29-00
12.	சுவடி 26 தொகுப்பு முழுமையாக -	40-00
13.	சுவடி 27 தொகுப்பு முழுமையாக -	50-00

தமிழ்ச்சிட்டு

1.	குரல் 19 இசை 1 முதல் 12 முடிய குரல் 20 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக	24-00
2.	குரல் 21 இசை 1 முதல் 12 முடிய குரல் 22 இசை 1 முதல் 12 முடிய - முழுமையாக	35-00

தமிழ் நிலம்

1.	இதழ் 1 முதல் இதழ் எண் 80 முடிய -	50-00
2.	இதழ் 81 முதல் இதழ் எண் 110 முடிய -	30-00
3.	இதழ் 111 முதல் இதழ் எண் 140 முடிய -	35-00
4.	இதழ் 141 முதல் இதழ் எண் 174 முடிய -	50-00

அஞ்சற் செலவுகள் தனி. பதிவஞ்சலில் பெற அஞ்சற் செலவுடன் மேலும் உருவா ஆறு மட்டும் சேர்த்தனுப்புங்கள்.

இவ்வாண்டுக்குரிய

தென்மொழி நாள்காட்டி

தி.பி. 2028
(கி.பி. 1997)



பாவலரேறு ஐயா அவர்களின் மிடுக்கான எழிலார்ந்த வண்ணப் படம் வழவழப்புத்தாளில் அழகிய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு தமிழ் மாதத்திற்கும் தனித்தனித் தாளில் தமிழ் ஆங்கில மாதங்கள் இணைந்து அச்சேறியுள்ளது.

தென்மொழி இயக்கக் குறிப்புகள், பாவலரேறு அவர்களின் பொதுவாழ்வுக் குறிப்புகள், பிற முகாமையான வரலாற்றுக் குறிப்புகள், ஐயா அவர்களின் அருங்கருத்துகள் மற்றும் பாவரிகளில் சிற்சில, பெருமக்கள் சிலரின் கருத்துரைகள் முதலியன இந் நாள்காட்டியில் இடம்பெற்றுள்ளன.

விலை உரு. 15/- (நேரில்)

விலை உரு. 25/- (பதிவஞ்சலில்)

பத்துப் படிகளும் அதற்கு மேலும் வாங்குவோர்க்கு பத்து விழுக்காடு கழிவு உண்டு.

- அமைச்சர், தென்மொழி

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. தொலைபேசி : 854 7829

முனைவர் சாலையாருக்கு 'ராணா' இலக்கிய விருது.

ஈரோடைத் தமிழ் இலக்கியப் பேரவையின் கடந்த ஆண்டுக்கான (1996) 'இராணா விருது' அறிவியப் பாவலர். முனைவர் சாலையார்க்கு வழங்கப்பட்டிருப்பது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறோம்!

அறிஞர் சாலையார் அவர்கள் தில்லியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை அறிஞர்கள் சிலருடன் சேர்ந்து உருவாக்கியவர்; தில்லித் தமிழ் எழுத்தாளர் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் முதலிய அமைப்புகளை முன் நின்று அமைத்தவர்; 'நெருப்புப் பாவலர்', 'நடைகொண்ட படைவேழம்', 'அறிவியக்கத் தமிழ் வேழம்' முதலிய அடைமொழிகளால் சிறப்பிக்கப் பெறுபவர்; உடல் நலிவுற்ற போதிலும் உளம் நலிவின்றி ஒவ்வொரு நாளும் மக்கள் சிக்கல்களுக்காக எழுதிக்கொண்டிருப்பவர்; வீறார்ந்த தமிழ் உணர்வினால் அரசின் வழக்குகளுக்கு ஆளானவர்.

பேராசிரியர் சாலையார்க்கு மேற்படி விருதும் உரு. 10000/- பணமுடிப்பும் வழங்கப்பெற்றபோது "புரட்சிப் பாவலர் போட்ட பாட்டுத்தடத்தில் புறப்பட்டு வந்த போர்க்குணம் படைத்த பாவலர்களில் ஒருவர் சாலை இளந்திரையனார்..." எனத் தொடங்கும் தகுதியுரை வழங்கப்பெற்றிருக்கிறது.

விருது பெற்ற அறிஞர் சாலையார் அவர்களும் அவர்தம் அருமைத் துணைவியாரும் தமிழ்ப் பேராசிரியருமான முனைவர் அம்மா சாலினியார் அவர்களும் நீடு வாழ்ந்து தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற உளமார வாழ்த்துகிறோம்.

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1.	வானூர்திவழி ஆண்டுக்கட்டணம்	– 300/–
2.	கப்பல்வழி ஆண்டுக்கட்டணம்	– 200/–

பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் திருக்குறள் மெய்ப்பொருளுரை

வெளியீட்டு நிகழ்ச்சி

காலம் : தி.பி.2028 கும்பம் 26 ஞாயிறு
(9.3.'97) காலை 10 மணி

இடம் : பாவலரேறு தமிழ்க்கள வளாகம்
சாயிநகர், மேடவாக்கம், சென்னை - 601302.

தலைமை : மருத்துவர் ச.இராமதாசு (நிறுவனர் : பா.ம.க.)

வரவேற்புரை : திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார்
(நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை)

நூல்வெளியீடு : மாண்புமிகு அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன்

நூல் பெறுவோர் : திரு. மா.செ. தமிழ்மணி
(பொதுச் செயலாளர். உ.த.மு.க)
திரு. புலவர். அரசமாணிக்கனார்
திரு. நிலா. வேங்கடவன்
திரு. வை. தமிழ்க்குமரன்
திரு. பல்லடம் மாணிக்கம்
திரு. வ. வேம்பையன்
(பகுத்தறிவாளர் கழகம் - கல்பாக்கம்)
திரு. ந. அரணமுறுவல்
திரு. துரை. தென்னவன்
(பைந்தமிழ்ப் பாசறை, எண்ணூர்)

சிறப்புரை : திரு. வே. ஆனைமுத்து
(மார்க்சிய - பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி)
திரு. பெ. மணியரசன்
(பொதுச் செயலாளர்- தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி)
நடுவர் 'திருக்குறள்' இராமகிருட்டிணன்

நன்றியுரை : தென்மொழி ப. துரையரசன்

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)